குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 49 | பிரமோதூத ஆண்டு ஆவணித் திங்கள் 10-9-90 | இதழ் 10

தருமபுரம் மேலவீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சித்திவிநாயகர், திருக்கோயிலுக்கு
நான்கு குருமூர்த்த ஆலயங்களுக்கும் நடைபெற உள்ள

திருக்குடமுழுக்கை முன்னிட்டு ஸ்ரீ சித்திவிநாயகர் காட்சிதருகிறார்

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

ஆசகற்றி நின்னறிவி
லாநந்த மாஞ்சிவனைக்
கூசகற்றி யுன்றன்
குணமென்று — பேசியிடும்
பேயாவா திக்கேது
பேசிடில்நீ தானந்த
மாயாவா திக்கே மகன்.

— முத்திநிச்சயம் 14

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 49 ‖ 10-9-90 ‖ இதழ் 10

உட்பொருள்

எண்		பக்கம்
1	தருமபுரம் குடமுழுக்குக் காணவாரீர்!	... 457
2	தருமை ஸ்ரீல ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	... 462
3	பார்வையாளர் குறிப்பு	467
4	திருக்குறள் - திருமந்திரம் ஓர் ஒப்பாய்வு	... 468
5	மணிக்கடலில் மூழ்கிய சில முத்துக்கள்	... 473
6	போதமும் சித்தியும்	... 477
7	ஸ்ரீ உமாமகேசமூர்த்தி	.. 481
8	பதியிலார்	... 482
9	சைவசித்தாந்தக்கல்லூரி ஓர் அன்பர் கடிதம்	... 484
10	சீகாழித் தலக்குறிப்பில் செந்தமிழ்ப்பண்பாடு	... 486
11	செய்திகள்	... 489
12	எதிர்காலம்	... 495
13	இதழ்வழிச் சைவசமயக் கல்வி-V பாடம் 4.	497

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 49 ★ இதழ் 10

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

பிரமோதூத - ஆவணி - 10—9—1990

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

தருமபுரம் குடமுழுக்குக் காணவாரீர்

தருமையில் குடமுழுக்கு :

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீன அருளாட்சியில் சிறந்திலங்கும் சிவாலயங்கள் இருபத்தேழு. இவற்றுள் அருள்நிறை அபயாம்பிகைஉடனாகிய தருமபுரீசுவரர் திருக்கோயிலும், ஒன்று. இது தருமபுரத்திலேயே அமைந்துள்ளது. இஃதன்றி ஆதீனக் குருமுதல்வர் ஜீவசமாதி கூடியுள்ள அருள்நிறை ஞானம்பிகை உடனாகிய ஞானபுரீசுவரர் ஆலயம், அருள்நிறை மகாலட்சுமி துர்க்காதேவி ஆலயம், வனதுர்க்காதேவி ஆலயம், சித்திவிநாயகர் ஆலயம், மாரியம்மன் ஆலயம் முதலியனவும் தருமையில் அமைந்துள்ளன. 29—1—89 ல் தருமை வடக்குக் குருமூர்த்த ஆலயங்களுக்கும், 7—9—89 ல் தருமை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்ட திருமுல்லைவாயில் அருள்நிறை

முல்லைவனநாதர் ஆலயத்திற்கும் பக்தர்களின் நன்கொடைப் பணியாகத் திருப்பணிகள் செய்யப்பெற்று மிகச்சிறப்பாகக் குடமுழுக்குப் பெருவிழா நிகழ்த்தப் பெற்றன.

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மேற்குறித்த தருமையில் அமைந்துள்ள ஆலயங்களுக்கும், ஆனந்தபரவசரின் மேலைக் குருமூர்த்தத்தில் எழுந்தருளியுள்ள நான்கு ஆசாரியர்களின் குருமூர்த்த ஆலயங்களுக்கும், இரண்டு கட்டமாக, நிகழும்பிரமோதூத ஆண்டு ஐப்பசித்திங்கள் 22 ஆம் நாள் (8—11—1990) வியாழக்கிழமை ஒன்றும், தைத்திங்கள் 21 ஆம் நாள் (3—2—1991) ஞாயிற்றுக்கிழமை ஒன்றும் ஆக இரண்டு நாள்களில் மிகச் சிறப்பாக திருக் குடமுழுக்குப் பெருவிழாவை நிகழ்த்தத் திருவுளம் பற்றி யுள்ளார்கள்.

தருமபுரீசுவரர் கோவில் :

எல்லாம்வல்ல சிவபரம் பொருள் தீயோரை அழித்து நல்லோரை வாழ்விக்கவென நிகழ்த்திய பெருவீரச்செயல்களை எட்டெனக் குறிப்பர். இவ்வீரச்செயல்கள் நிகழ்ந்த தலங்களை அட்டவீரட்டத் தலங்கள் என வழங்குவர். இவற்றுள் மூன்று தலங்கள் தருமை ஆதீன அருளாட்சியில் திகழ்வது குறிப்பிடத் தக்கது. தம்மை அன்போடு பூசித்து, அடைக்கலம் புகுந்த மார்க்கண்டேயர் மேல் காலபாசத்தை வீசிய எமதர்மனை இடது திருவடியால் உதைத்துமாளச்செய்த வீரச்செயல் நிகழ்ந்த திருத்தலம் திருக்கடவூர். எமன் மாய்ந்து, பூமிபாரம் மிக்கதால் பூமாதேவி சிவபரம் பொருளைப் பிரார்த்தித்து எமதர்மனை எழுப்பித்தர வேண்டினர். இறைவன் கருணையால் மீண்டும் உயிர் பெற்ற எமதர்மன் தான் செய்த சிவ அபராதம் நீங்க சிவலிங்கம் தாபித்து வழிபட்டு உய்திபெற்ற திருத்தலமே இத் தருமபுரம். எமனுக்குத் தருமன் என்பதும் ஒரு பெயர். தருமன் பூசித்து அருள் பெற்ற காரணத்தால் இத்தலம் தருமபுரம் எனப் பெயர் பெற்றது. இத்தலத்தில் எமனுக்கு என்று சிலையாலாகிய திருமேனியும், எழுந்தருளுகைக்கு உரிய செப்புத் திருமேனியும் உண்டு. அருள்நிறைஅபயாம்பிகை உடனுகிய தருமபுரீசுவரர் திருக்கோயிலே தருமையில் அமைந்த பழைய சிவாலயமாகும். இவ்வரலாறு மாயூரப்புராணத்தில் 20 திருவிருத்தங்களால் விரித்துரைக்கப் பட்டுள்ளது.

" தருமன் வரம்பெற்ற காரணத் தால்அத் தலம்பொலிந்து
தரும புரஞ்சிவ லிங்கம் பொலிந்து தருமலிங்கம்
தருமம் வளர்க்கும் தடமும்பொலிந்து தருமதடம்
தருமம் உணர்ந்தவர் என்றேதிடும் பெயர் சார்ந்தனவே"

எனும் பாடல் தருமபுரம் என்ற பெயர்க்காரணத்தை இனிது விளக்கக் காணலாம்.

இயமனை உதைத்தது ஏன் :

பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும் உலக வழக்கல்லவா? பிறவியே துன்பம்தரும் ஒன்றுதானே! திருநாவுக்கரசரும் 'பிறவிமாயப் பிணக்கு' என்று குறித்தருளுகிறரே! விதித்த ஆண்டு நிறைந்தபோது மார்க்கண்டேயரை - பாசம்வீசி உயிர் பிரிக்க முயன்ற எமதர்மன் செயல் நியாயமானதுதானே! சிவபெருமான் எமனை ஏன் தண்டிக்க வேண்டும்? என்பன போன்ற பல வினக்கள் பக்தர்கள் உள்ளத்திலும் எழுவது இயற்கையே! சிவனடியாராகிய மார்க்கண்டேயரை இறைவன் சிவகணங்களை அனுப்பி அழைத்து வரச்செய்வான். அப்படி இருக்கும்போது எமன் தனது அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட இடத்திற்குத் தானே சென்று பாசம் வீசிய செயல் பிழையுடையது. இது குறித்து நமது சைவத் திருமுறைகளில் அரிய குறிப்புக்கள் காணக்கிடைக்கின்றன. அவை நமது சமயம் போற்றிய பண்பாட்டின் பதிவுகளாகத் திகழ்வன.

அகச்சான்றுகள் :

நக்கீர தேவநாயனர் அருளிய கயிலைபாதி காளத்திபாதி அந்தாதியில் ஒரு அரியபாடல். எமதர்மன் எமதூதர்களுக்குச் சொல்வதாக அமைந்தது.

" தொழுது நமனும் தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில்சீர் காளத்தி மன்னன் - பழுதிலாப்
பத்தர்களைக் கண்டால் பணிந்தகலப் போமின்கள்
எத்துணையும் சேய்த்தாக என்று"

சிவனடியாரை எமனே எமதூதனே நலிதல் கூடாது என்பதை விளக்கும் அரியபாடல் இது. திருநாவுக்கரசு சுவாமிகள் தமது காலபாசத்திருக்குறுந்தொகையுள்,

"படையும் பாசமும் பற்றிய கையினீர்
அடையன் மின்நம தீசன் அடியரை
விடைகொ ளூர்தியி னன்அடி யார்குழாம்
புடைபுகாது நீர் போற்றியே போமினே"

என, நமது ஈசன் அடியரை நலியாதீர் என எமதூதர்களுக்கு ஆணையிடுவதைக் குறித்துள்ளார். சிவகணங்களே சிவனடியாரை எதிர்கொண்டு அழைத்துப்போதல் வேண்டும் என்பதை

"இந்திரன் மால்பிரமன் எழிலார்மிகு தேவரெல்லாம்
வந்தெதிர் கொள்ள என்னை மத்தயானை அருள்புரிந்து"

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலாயம் சேர்ந்த திறம் தேவாரத்துள் காணப்படுவது.

ஞானபுரீசுவரர்கோயில் :

தருமை ஆதீனம் இன்றைக்கு 450 ஆண்டுகளுக்கு முன் திருக்கயிலாய பரம்பரையில் ஞானசிரியராய்த் திருவாரூரில் வீற்றிருந்த கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகசிகோத்தமரின் மாணாக்கர்களுள் ஒருவராகிய ஸ்ரீலஸ்ரீகுருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகளால் தோற்றுவிக்கப்பெற்றது. இவர்கள் திருவில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் மரபில் அவதரித்தவர்கள். மதுரைப் பொற்றாமரைத் திருக்குளத்தில் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானைப் பூஜாமூர்த்தியாகக் கைவரப்பெற்றவர்கள். சிவனருளால் திருவாரூரில் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசதேசிகோத்தமரைக் குருமூர்த்திகளாகப்பெற்று, அவர்கள் ஆணையின் வண்ணம் மயிலாடுதுறையை அடுத்த வில்வாரண்யமாகிய தருமபுரத்தில் ஆதீனத் திருமடம் கண்டவர்கள். இறையருளால் இவர்கள் வாழ்வில் நிகழ்ந்த அருளற்புதங்கள் பல. தம்மை நாடி ஓடி வந்த பக்குவிகளுக்கு ஞானோபதேசம் செய்து தருமையில் தருமபுரீசுவரர் ஆலயத்தின் மேல்பால் ஜீவ சமாதி கூடி, மீண்டும் வெளிப்போந்து, திருமரபு நீடூழி தழையச் செய்து பின்னரும் ஜீவசமாதிகூடியவர்கள். சிவபோகசாரம், சொக்கநாதவெண்பா, முத்திநிச்சயம், சோடசகலாப் பிராசாத சட்கம் முதலிய எட்டு அருள்நூல்களை அருளிச்செய்தவர்கள். இவர்கள் ஜீவசமாதி கூடிய இடத்தில் சிவாகம விதிப்படி சிவலிங்கப் பிரதிட்டைசெய்து, அம்மை மற்றும் பரிவார தெய்வங்களுடன் எழுப்பப்பெற்ற சிவாலயமே தருமையில் மேலக்கோயில் என்று வழங்கப்பெறும் அருள்மிகுஞானம்பிகை உடனுகிய ஞானபுரீசுவரர் திருக்கோயிலாகத்திகழ்வது.

குடமுழுக்குக் காணும் கோயில்கள் :

இவ்விரு சிவாலயங்களும் அல்லாமல், அருள்நிறை தருமபுரீசுவரர் ஆலய வடக்குத் திருச்சுற்றில் அமைந்துள்ள பதினெண் திருக்கரங்களுடன் கூடிய அருள்நிறை மகாலக்ஷ்மி துர்க்காதேவி ஆலயம், ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவில் அமைந்துள்ள அருள்நிறை வனதுர்க்காதேவி ஆலயம், தருமை மேலவீதி, தெற்குவீதி சந்திப்பில் அமைந்துள்ள அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயம், தருமையின் கிழக்கெல்லையில் அமைந்துள்ள அருள்நிறை மாரியம்மன் ஆலயம், ஆனந்த பரவசர் பூங்காவில் அமைந்துள்ள இரண்டாவது, பத்தொன் பதாவது, இருபத்துநான்காவது, இருபத்திஐந்தாவது குருமூர்த்தி களின் குருமூர்த்த ஆலயங்கள் ஆகியவை பெரும் பொருட் செலவில் திருப்பணிகள் செய்விக்கப் பெற்று வருகின்றன. அவற்றுள் ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தின் மூன்று நிலை இராஜ கோபுரத் திருப்பணி இருபத்தையாயிரம் ரூபாய் செலவில் இராஜபாளையம் மில் அதிபர், திரு. இரா. இராமசுப்பிரமணிய ராஜாவின் உபயமாக நடைபெற்றுவருகிறது. மேற்குறித்த நாட்களில் குடமுழுக்குப் பெருவிழாக்கள் மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளன.

வருக ! அருள் பெறுக !

சைவப்பேரன்பர்கள் சிவமூர்த்தங்கள், குருமூர்த்தங்கள், சக்திமூர்த்தங்களாகிய திருக்கோயில்களின் கும்பாபிஷேகம் காண தயாராகுங்கள். திருப்பணியில் ஒல்லும் வகையில் பங்கேற்க முன்வாருங்கள். குருவருளும், திருவருளும் பெற்று உய்யவரும் அரியவாய்ப்பைப் பயன்படுத்துங்கள். அனைவரும் வருவீர்களாக! திருவருள் பெறுவீர்களாக!

தருமை ஆதீனம் 16 குருமூர்த்திகளின்

அற்புத வரலாற்றுப் பாமாலை

கமலைஞா னப்ரகா சப்பெரியர் கருணையைக் கைக்கொண்டு [நிதிசெய் தருமைக்
கற்றவா தீனசந் தானகுரு வாகி யொளிர் கலைஞான [சம்பந்தர்சீர்
விமலவா னந்தபர வசர்சச்சி தானந்தர் மிளிர்மாசி லாமணி மிகும்
விரதவ ஞானசம்பந்தர்புகழேறுதிருமேவுமவ்வரியபெயரோன்
அமலதிரு வம்பலவ ரழகியசிற் றம்பலவ ரானதிரு நாவினரசர்
ஆதிசிவ ஞானமுனி சச்சிதா னந்தருயர் அரியமுத் துசகுமாரர்
சமலமறு ஞானசம்பந்தர்கந் தப்பரொடு தவமாசிலாமணியர்பின்
சச்சிதா னந்தரெனும் சந்தான குரவரது சரிதமதியம்புவோமே.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

திருக்கயிலாய பரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான

திருப்பெருந்துறை ஸ்ரீ ஆத்மநாதசுவாமி ஆலயத்தில் நடைபெற்ற திருமுறை வேள்வியில் எட்டாம் திருமுறை முற்றோதல் நிறைவில்

வழங்கியருளிய

ஆசியுரை

17—8—1990

அருவம், உருவம், அருவுருவம் :

இறைவன் அருவம், உருவம், அருவுருவம் என மூன்று நிலையில் இருந்து உயிர்கட்கு அருள்செய்கிறான். இதனை விளக்கும் தலங்கள் இரண்டு. ஒன்று சிதம்பரம், மற்றொன்று இத்திருப்பெருந்துறை. சிதம்பரத்தில் இரகசியம் அருவநிலையில் அருள்புரிவதைக் குறிப்பது. நடராஜர் உருவநிலையில் அருள் பாலிப்பது. ஸ்ரீ மூலநாதர் அருவுருவாகிய சிவலிங்கத் திருமேனியைக் குறிப்பது. அதேபோன்று திருப்பெருந்துறையிலும் மூலத்தானத்தில் ஆத்மநாதர் அருவநிலையில் அருள்புரிகிறார். இங்குச் சிவலிங்க மூர்த்தி இல்லை. ஆவுடையார் மட்டுமே உள்ளது. அடுத்து உருவ நிலையில் மாணிக்கவாசகரே இங்கு உருவத் திருமேனியுடன் அருள்புரிகிறார். அருஉருவநிலையில் அம்மையின் திருவடிமட்டுமே காட்சிதருகிறது. அம்மைக்கு இங்கு உருவம் இல்லை. அம்பிகை சந்நிதிக்கு எதிரில்தான் மாணிக்கவாசகர் சந்நிதி உள்ளது. மணிவாசகர் அருளுபதேசம் பெற்ற இத்தலமும், அவர் திருவருள் நிறைவைப் பெற்ற சிதம்பரத் தலமும் அருவ, உருவ, அருவுருவ வழிபாட்டை உணர்த்தும் தலமாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

மணிவாசகரின் சிறப்பு :

இத்தலத்தில் மாணிக்கவாசகருக்குத்தான் பிரம்மோற்சவம் நடைபெறுகிறது. திருத்தேரிலும் மணிவாசகரே திருவுலாவருகிறார். அடியவருக்குப் பிரமோற்சவமும், திருத்தேருலாவும், நிகழும் சிறப்பு வேறு எத்தலத்திலும் காண இயலாதது. மணிவாசகருக்கே அமைந்த தனிச் சிறப்பு, இடைப்பட்ட காலத்தில் முருகனுக்கு ஒருவர் கோயில் எடுப்பித்து திருக்குடமுழுக்குச் செய்யும் காலத்தில் அங்கு மணிவாசகரையே பிரதிட்டை செய்ய வேண்டும் என்ற அசரீரி தோன்ற அவ்வண்ணமே மணிவாசகரையே எழுந்தருள்வித்துள்ளனர். இம் மூர்த்தியை ஆனந்த மாணிக்கவாசகர் எனக் குறிக்கின்றனர். எல்லாச் சிறப்புக்களும் திருவருட்குறிப்பின்வழி இங்கு மணிவாசகருக்கே நடந்துவருவது குறிப்பிடத்தக்கது. ஆவுடையார் உள்ள மூலத்தானம் மட்டுமே மாணிக்கவாசகரின் திருப்பணி என்றும், அம்மையார் கோயில் இராமநாதபுரம் இராஜாதிருப்பணிஎன்றும், கொடுங்கைச்சிறப்பும் மற்றையோர் திருப்பணியே என்றும் குறிப்பிடுகின்றனர்.

இத்திருத்தலத்தில்தான் குருத்த மரத்தடியில் இறைவன் குருமூர்த்தியாய்எழுத்தருளிகுதிரைகொள்ளவந்தமணிவாசகரை ஆட்கொண்டுஅருளுபதேசம்செய்தார். மணிவாசகர்குறிப்பிடும் தீர்த்தமாம்பொய்கை, கோயிலின் தென்பிராகாரத்தில் உள்ளது. குருந்த மரமும் உபதேசக் காட்சியும் உட்கோயில் மேற்குப் பிரகாரத்தில்சிலைவடிவில்அருந்திருமேனியாகச் காட்சிதருகிறது.

திருவாசகப் பொருள் :

மணிவாசகர் அருளிய பாடல்கள் திருவாசகம், திருக்கோவையார் என இருவகைப்படுத்திப் போற்றப்படுகின்றன. இறைவனே இவரிடம் 'பாவை பாடிய வாயால் கோவைபாடுக' எனக்கேட்டுப்பெற்ற 'திருக்கோவையார்' உலகியல்இன்பத்தையும் பேரின்பத்தையும் இணைத்துப்பாடும் இணையிலாப்பனுவலாகத் திகழ்வது. சிற்றம்பலவர்திருக்கரத்தால் எழுதிய பெருமை இவர்அருளிய எட்டாந்திருமுறைக்கே உரிய தனிச்சிறப்பாகும். திருவாசகத்திற்குப் பொருள் கேட்ட அன்பர்கட்கு வாசகத்தின் பொருள் நடராசப் பெருமானே என்று காட்டி அந்நடராசப் பெருமான் திருவடியிலேயே இரண்டறக் கலந்த மேன்மையும் இம்மணிவாசகருக்கே உரிய தனிச் சிறப்பாகும்.

முதலும் முடிவும் :

இவர்அருளிய திருவாசகமும் திருக்கோவையாரும்எட்டாந் திருமுறையாகப் போற்றப் படுகின்றன. திருவாசகத்தின் தொடக்கம் "நமச்சிவாய" என்பது, நிறைவு "அம்மை எனக்கு அருளியவாறு யார்பெறுவார்அச்சோவே" என்பது. இதுதமக்கு இறைவன் அருளிய திறத்தை வியந்து போற்றுவதாயமைந் துள்ளது. திருக்கோவையார் நிறைவில் " உற்றவர்க்கு ஊரன் மற்றுயாவர்க்கும் ஊதியமே " என நிறைகிறது. திருவாசகத்தின் முதலையும் திருக்கோவையாரின் முடிவையும் இணைத்துப் பரர்த்தால் உயிர்க்கு ஊதியம் திருவைந்தெழுத்தே என்பதை முடிவாக நமக்கு மணிவாசகர் உணர்த்தியுள்ளமை இனிது விளங்கும்.

திருவாசக அமைப்பு :

சிவபுராணம்முதல், அச்சோப்பதிகம்ஈருக 51தலைப்புக்களை யுடையது. இறைவனை முன்னிலைப்படுத்திப் போற்றுவது. தேவாரம் படர்க்கையில் போற்றுவது ஈண்டு நினைக்கத்தக்கது. திருவாசகம் இயற்கை வருணனையின்றி இறைவனை நேரே போற்றுவதாக உள்ளது. மூவர் தேவாரமும் இசைத்தமிழாக இருக்க இஃதுஇயற்றமிழில் இருப்பதும்நினைக்கத்தக்கது. மகளிர் விளையாட்டு வகையை நிலைக்களனைக்கொண்டு இறைவன் புகழ்பாடு திருமுறை இஃதொன்றேயாம். திருஎம்பாவை, திருஅம்மானை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி,திருவுந்தியார், திருத்தோள்நோக்கம், பொன்னூசல் எனவருவன அனைத்தும் பெண்கள்விளையாட்டே யாம். 38 தலங்கள் இதில் போற்றப்படுகின்றன. தேவாரம்போல் இத்தலத்தில் பாடப்பட்டது என்று குறிப்பிட்டுச் சொல்லும் பகுதிகள் சிலவே உள்ளன. அவை கோயில் மூத்ததிருப்பதிகம். கோயில் திருப்பதிகம், திருக்கழுக்குன்றத் திருப்பதிகம் முதலியன. சிவபுராணம்; கீர்த்தித் திருஅகவல், திருஅண்டப் பகுதி, போற்றித் திருஅகவல் நான்கும் தனிநிலைச்செய்யுட் களாம். திருச்சதகம், நீத்தல் விண்ணப்பம், திருஅம்மானை, திருஎம்பாவை முதலியனமுறையே 100, 50, 20, 20 பாடல்களைக் கொண்டுள்ளன. அன்னைப்பத்து, குறில்பத்து, கண்டபத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தபத்து, உயிருண்ணிட்பத்து, அச்சப்பத்து, பிடித்தபத்து, குலாப்பத்து, அற்புதம்பத்து, சென்னிப்பத்து முதலியனபத்துப்பத்துப்பாடல்களாக் பொருட் பெற்றி பற்றியதாகத் தலைப்புக்கள் அமைந்துள்ளன.

இவற்றுள் சொல்லப்படும் கருத்துக்களை இருவகையில் அடக்கிக் காணலாம். தம்மைத் திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட இறைவன் இடையில்விட்டுப் பிரிந்ததனல் ஏற்பட்ட வருத்தவுரைகள் ஒருபகுதி, யாவர்க்கும் மேலாம். அளவிலாச் சீருடையான். யாவர்க்கும் கீழாய தம்மை ஆட்கொண்டருளிய கருணைத்திறம் மற்றொரு பகுதி.

முப்பொருள் உண்மை :

சிவபுராணம், சிவபரம்பொருளின் பழ்மையைத் திறம்படக் கூறுவது. கீர்த்தித்திருஅகவல் சிவபெருமானின்செயலால் வந்த கீர்த்தி அதாவது புகழைக் கூறுவது. முதல் இருபாடல்களும் சிவனது பழமையும், பெருமையும், புகழும் பேசப்பெறுவதன் வாயிலாகப் பதியின் உண்மையும், பெருமையும் கூறுவன வாயுள்ளன. திருஅண்டப்பகுதி, உலகம் பல்கோடி அண்டங்களாயுள்ளதைப் பல படவிரித்துக் கூறுவதன் வாயிலாக அறிவில் பொருளாகிய பாசத்தைக் கூறியதாயிற்று. போற்றித் திருஅகவல், உயிர்களின் வரலாற்றை மிகத் தெளிவாகவும், எளிமையாகவும் எடுத்தியம்புவதன் வாயிலாகப் பசு உண்மை கூறுகிறது. எனவே முதல் நான்கு பாடல்கள் வாயிலாகப் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மை கூறுகின்ருர்.

திருவாசகக் கருத்துக்களுட் சில :

எட்டினோடு இரண்டும் அறியேனைப் பட்டிமண்டபம் ஏற்றினை.

'இரண்டும் இலித் தமியனேற்கே' என்பதற்கு இரண்டலா ஆன்மா என்ற சாத்திரக் கருத்தும், இரண்டும் கெட்டான் என்னும் உலகியல் கருத்தும் நோக்குக.

'ஆமாறு உன்திருவடிக்கே அகங் குழையேன்'-திருச்சதகம் 18. இப்பாடல் 'நிலைபெறுமாறு எண்ணுதியேல்' எனும் தாண்டகத்தோடு ஒப்பிடத்தக்கது.

திருவெம்பாவையும், திருப்பாவையும் எழுந்த நோக்கத்தாலும், நுவலும் பொருளின் திறனாலும் வெவ்வேறு பாங்குடையன. மழை வேண்டலும் தக்க கணவனை அடைய வேண்டுதலும் பற்றிய பாடல்கள் ஒப்பிடற்குரியன என்ற அளவில் நின்று விடாது முழுமையாக ஒப்பிட்டு நோக்கின்பல உண்மைகள் விளங்குவனவாம்.

பிற்காலக் கலம்பகங்களில் பேசப்படும் அம்மானைப் பகுதியும், திருவாசகத்தில் காணப்படும் அம்மானைப் பகுதியும் பாடல் அமைவில் வெவ்வேறு திறத்தன.

திருச்சாழல் – வினாவிடை அமைப்பில் அமைந்தது. இறைவனின் அருட்செயல்கள் அனைத்தும் உயிர்களின் பொருட்டே என்பதைத் தெள்ளத் தெளிவாகக் கூறும் பகுதி இது. புத்தரை வாதில் வெற்றி கொண்ட இயைபும் உடையது.

திருவுந்தியார் – இதன்கண் தக்கன் யாகம் பற்றிய செய்தி நகைச்சுவை ததும்பப் பாடப்பெற்றுள்ளது.

கண்ணப்பர் – திருக்கோத்தும்பி, திருத்தோள்நோக்கம் ஆகிய இரண்டிலும் இடம் பெற்றுள்ளார்.

சண்டிகேசுரர் – திருத்தோள் நோக்கத்தில் 7ஆம் பாடலில் இடம் பெற்றுள்ளார்.

திருத்தசாங்கம் – இறைவற்குரிய பத்து உறுப்புக்களும் இயம்பப்படும் இப்பகுதியோடு, கீர்த்தித் திருஅகவலில் கூறப் பெறும் தசாங்கங்களையும் (100–124) ஒப்பிட்டுக் காண்டல் பயனுடையது.

இருவினை ஒப்பும் மலபரி பாகமும் வந்த பின்பே இறையடி அடையலாம் திருக்கழுக்குன்றப் பதிகம் (1) இவ்வுண்மையைக் கூறுகின்றது.

அச்சோப்பதிகம் - இறைவன் குருநாதனைத் தமக்குத் தீக்கை செய்த பாங்கை மிக உருக்கமாக விவரிக்கிறது.

திருக்கோவையார் :

திருவளர் தாமரை–இப்பாடற்குப் பேராசிரியர் தரும் உரை பெரிதும் போற்றற்குரியது.

ஈசற்கு யான் வைத்த அன்பின் அகன்று என்ற பாடலில் (பாடல் 109) – கண்ணின் அருமையும் கருத்தின் பெருமையும் ஒருங்கு காண்டற்குரியது. இயற்கைப் புணர்ச்சி முதல் பரத்தையிற் பிரிவு முடிய 25 தலைப்புக்களில் இத்திருக் கோவையார் அகவியல் வாழ்க்கையைக் கோவைப்படுத்தி சிற்றின்பவாழ்வைஉவமைகாட்டிப் பேரின்ப வாழ்விற்கு உயிர் களை அழைத்துச் செல்கிறது. திருக்கோவையாரில் 'திரு' என்ப

தற்குகண்டாரால் விரும்பப் பெறும் தன்மை நோக்கம் என்று பேராசிரியர் உரை கண்டுள்ளார். திரு என்பது சிவபெருமானே ஆதலின் அவர் நன்றே செயினும் தீதே செயினும் அனைத்துயிர்களும் அவர்மாட்டு விருப்புடையரேயன்றி வெறுப்புடையாரல்லர் என்பதால் இக்கருத்தை நன்கு தெளியலாம்.

இப்புனித வேள்வியில் பங்கு கொண்டுள்ள புலவர்கள், திருமுறைவாணர்கள் இவர்கட்கு மாகேஸ்வரபூசை செய்து சிறப்பித்த திருவாவடுதுறை ஆதீனப் பணியாளர்கள் இத்திருக்கோயிற்பணியாளர்கள் அனைவருக்கும் எல்லா நலன்களும் பெருக ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க பெருந்துறை ! வளர்க திருமுறை !

பார்வையாளர் குறிப்பு

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான

ஸ்ரீ அமிர்தகடேசுவரசுவாமி தேவஸ்தானம்,

திருக்கடவூர்.

இன்று மதியம் இத்திருக்கோவிலுக்கு வருகின்ற பாக்யம் கிடைத்தது. என்னுடன் முன்னள் தமிழக அரசு வழக்குரைஞர் திரு. R. கிருஷ்ணமூர்த்தி அவர்களும், தமிழக உயர்நீதி மன்ற வழக்குரைஞர் சங்கத் தலைவர் திரு. R. காந்தி அவர்களும் வந்திருந்தார்கள். ஆலயதரிசனம் மிக நல்ல முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆலயம் மிகநல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருவதையும் நேரில் கண்டறிந்தேன்.

எல்லாம் வல்ல இறையருளின் அருள்பெற ஏற்பாடு செய்த ஆலய நிர்வாகத்தினருக்கு எனது நன்றி.

(S-d) **JUSTICE LATSHMANAN**

16—9—90 **High Court, Madras 104.**

திருக்குறள் - திருமந்திரம்
ஓர் ஒப்பாய்வு

திரு. வி. சா. பாலசுப்ரமணியன்
பேராசிரியர், மன்னர்சரபோஜி அரசுகல்லூரி, தஞ்சாவூர்.

ஒரே வகையான இருபொருள்களின் தரம் முதலியவற்றை அறிய ஒப்பிட்டு முறையை ஆள்கிறோம். ஒரு கடையில்உள்ள ஒரு பொருளையும் - அடுத்த கடையில் இருக்கும் அதே வகையான இன்னொரு பொருளையும் அளத்தல் முதலியவற்றால் ஒப்பிடுகிறோம். சீர்தூக்கிப்பார்த்து தரம் முதலியவற்றை உணர்கிறோம். இலக்கிய உலகில் இவ்வகை ஒப்பீடு பெரிதும் பயன்படும். இருமொழிகளில் எழுதப்பட்டுள்ள ஒத்த கருத்துள்ள இருநூல்களை ஒப்பிட்டு முறையில் காணலாம். அல்லது ஒரே மொழியில் தோன்றிய இருவேறு ஒத்த கருத்துள்ள இலக்கியங்களை ஒப்பிட்டுச் சீர்தூக்கிப் பார்த்து மதிப்பிடலாம்.

"The object of Comparative literature is essentially the study of Diverse, Literature in their relation with one another" என்பர் அறிஞர். வேறு வேறு இலக்கியங்களுக்கிடைய உள்ள உறவுகள் அதாவது கருத்து முதலியவற்றை ஆராய்வதே ஒப்பிலக்கியத்தின் குறிக்கோள் என்பது இதன் கருத்து.

கம்பர்மாபெரும் இலக்கியஆசிரியர். ஷேக்ஸ்பியர் ஆங்கில உலகில் பெரிய நாடக இலக்கிய ஆசிரியர். இருவருமே வேறு இலக்கியங்களை மூலமாகக் கொண்டவர்கள். வான்மீகியை அப்படியே மொழிபெயர்த்து எழுதியிருப்பின் கம்பர்உலகமகா கவிகளுள் ஒருவராக ஆகியிருக்கமுடியாது. வான்மீகிஎழுதியது புனையா ஓவியம் எனில், பல்வேறு வண்ணங்கள் தீட்டி உயிரோவியமாக்கித் தமிழில் தந்தவர் கம்பர். அதனல் கம்பர் இலக்கிய உலகில் ஈடுஇணையற்று விளங்குகிறர்.

இதுபோல ஆங்கில உலகில் ஷேக்ஸ்பியர் மற்ற நூல்கள், வரலாறுகள் முதலியவற்றிலிருந்து ஏராளமான கருத்துக்களை எடுத்துள்ளார். அவரும் கம்பரைப்போல அந்த இரவல்கருத்துகளைத் தன்வயமாக்கிக்கொண்டு எழுதுகிறர். காட்டாககிரோக்க

வரலாற்றில் இடம்பெற்ற ஜூலியஸ்சீசர், அந்தோணி-கிளியோபாட்ரா ஆகியவர்களின் வரலாறுகளைக் குறிப்பிடலாம். ஷேக்ஸ்பியரின் கைவண்ணத்தால் இந்த வரலாற்று நாயகர்கள் உயிர்பெற்று தன்னிகரற்று நாடகமாந்தராய் பல்லாயிரம் மக்களின் உள்ளங்களிலே பவனி வருகிறார்கள்.

திருவள்ளுவரும், திருமூலரும் வேறுவேறு காலத்தவர்கள். சில ஆன்மீகக் கருத்துகளில் அவர்கள் ஒன்றினைகிறார்கள். காலத்தால் முந்திய குறள்கள் பலவற்றைத் திருமூலர் திருமந்திரத்தில் ஆள்கிறார். அவற்றைப் பின்வருமாறு வகைப் படுத்தலாம்

1. குறள் தொடரை அப்படியே ஆளுதல்.
2. ஒரிரு குறள் சொற்களை மட்டும் ஆளுதல்.
3. குறளின் கருத்தினை மட்டுமே ஆளுதல்.

என்பன அவை.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்துஅடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப்பு உடைத்து. (126)

ஆபத்து வருங்காலத்து ஆமை தன் நான்கு கால்கள், தலை முதலியவற்றை தன் ஓட்டிற்குள் அடக்கிக் கொள்ளும்; பகையிடமிருந்துதப்பும். அதுபோல கோபம் முதலியன வரும்போது (தற்கோபம், பிறர்கோபம்) ஒருவன் ஐந்து பொறிகளையும் அடக்கி ஆளவேண்டும். அத்தகையவனுக்கு இப்பிறவியிலும் ஏழுபிறவிகளிலும் பாதுகாவல் உண்டு என்பது இக்குறளின் பொதுவான கருத்து.

பெருமை சிறுமை அறிந்தெம் பிரான்போல்
அருமை எளிமை அறிந்தறி வாரார்!
ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி
இருமையும் கெட்டிருந்தார் புரை அற்றே. (132)

பிறருடைய பெருமை சிறுமைகளை எங்கள் தலைவன் சிவபெருமான்போல் அறிந்தவர் யார்? அவனது அருமை எளிமையை உணர்ந்தவர் ஒரு சிலரே. ஆமை தன் ஐந்துறுப்புகளை அடக்குதல்போல புலன் அவா ஐந்தினையும் தமக்குக் காவலாகவுள்ள சிவனது திருவருளினால் அடக்குபவர் சிலரே. இப்பிறவி, மறுபிறவிகளில் இன்ப துன்பங்கள் அற்று அத்தகையோர் இருப்பர் என்பது இம்மந்திரத்தின் கருத்து.

இதில் ஆமை ஒடுபோல சிவனே அரணாக நிற்றல், இம்மை மறுமைகளிலும் துன்பம் அத்தகையவரை அணுகாமை, சிவனது பெருமை உணர்தல் முதலியவற்றை இம்மந்திரம் குறித்தல் காண்க.

இதுபோல அடிப்படை கருத்துக்கள் சிலவற்றை திருமூலர் குறளிலிருந்து வாங்கி அவற்றைத் தம்வயமாக்கிக் கொள்வதன் மூலம் உயர்கிறார். சுருக்கம் கருதி இதுபோன்ற ஒரு சில குறள்-திருமந்திர ஒப்பாய்வே இக்கட்டுரையில் இடம் பெறுகிறது.

வள்ளுவர் அடக்கமுடைமையில் கூறிய கருத்துக்களை அப்படியே வாங்கி தம் கோட்பாடான சிவவழிபாட்டில் ஆளும் திருமூலரின் சதுரப்பாடு மெச்சத்தக்கது. சிவனை வழிபடுவோர் ஐம்புல அடக்கத்தில் நிற்கவேண்டும். அதனால் இம்மை மறுமை போன்றவற்றை விலக்கி குற்றமற்றவர்களாய் விளங்க முடியும் என்று சொல்லி குறள் கருத்தைத் தன்வயமாக்கும் உத்தியை ஆள்வதனை இந்த ஒப்பீடு காட்டுகிறது. இது முதல் வகைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

பொறிவாயில் ஐந்துஅவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். (6)

புலனுணர்விற்கு வாயிலாக இருக்கும் மெய்வாய் கண், மூக்கு, செவி இல்லாதவன்; பொய்யில்லாத மெய்யான ஒழுக்கம் கொண்டவன் இறைவன். அவன் வழி நிற்பார் மண்ணுலகிலும், விண்ணுலகிலும் நீண்டகாலம் இனிது வாழ்வர் என்பது இதன் பொதுவான கருத்து.

ஒன்றவன் தானே; இரண்டவன் இன்னருள்;
நின்றனன் மூன்றினுள்; நான்குணர்ந்தான்; ஐந்து
வென்றனன்; ஆறுவிரிந்தனன்; ஏழும்பர்ச்
சென்றனன்; தான் இருந்தான்; உணர்ந் தெட்டே.

மேற்கண்ட குறளில் வந்துள்ள ஐந்து என்னும் ஒருசொல் மட்டுமே இம்மந்திரத்துள் இடம் பெறுகிறது. மற்ற க•த்துக்கள் யாவும் திருமூலரின் தன்வயமாக்குதல் என்ற உத்தியின்பாற் பட்டவையே. குறள் 'பொறிவாயில் ஐந்து' என்பதனை இவரும் இறைவனின் பண்புகளில் ஒன்றாகக் காட்டுகிறார். ஒன்று முதல் எட்டு வரை சிவனது பண்புகளாகக் குறிப்பிடுவது திருமூலரின் அறிவுத் திறனிலிருந்து வெளிவருவது.

குறளின் ஒரு தொடருக்கு, இவரும் ஒருதொடரிலேயே பொருள் விளக்கம் தருவதாக இதனைக் கொள்ள இடமுண்டு. ஆயினும் திருவள்ளுவர் தம் கடவுள் வாழ்த்துள் இறைவன் திருவடியை மட்டுமே சுட்டி ஏழு குறட்பாக்களை அமைக் கின்றார். இறைவன் திருமேனி முதலியன அப்பத்தில் யாண்டும் குறிக்கப்பெறவில்லை. எனவே வள்ளுவர் 'பொறிவாயில் ஐந்து அவித்தான்' என்ற தொடரால், இயல்பாகவே இறைவன் பொறி புலன்கள் அற்றவன் என்றே உய்த்துணர வைக்கிறார். இதனை நன்குணர்ந்த திருமூலர், 'ஐந்து வென்றனன்' என்கிறார். அடியார்களின்ஐம்புலன்களை வெல்லதுணை நிற்பவன் இறைவன் என்ற கருத்திலேயே ஆள்கிறார் என்ற கருத்து வலிமையுடைய தாகும். இம்மந்திரம்மேற்குறித்தவகை மூன்றினுள் இரண்டாவது வகைக்கு ஏற்ற எடுத்துக்காட்டு எனலாம்.

குறளில் சொல்லையே ஆளாது கருத்தினை மட்டுமே ஆளும் மந்திரத்துக்கு எடுத்துக் காட்டு வருமாறு :

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பு ஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

பிறப்பினால் அனைத்து உயிர்களும் சமம். எனினும் அவ்வுயிரின் சிறப்பு, அவ்வுயிர் தாங்கி நிற்கும் உடல் செய்யும் தொழிலால் புலப்படும். பிறப்பினால் ஜாதிவேற்றுமை முதலியன பாராட்டல் கூடாது என்பது இதன் கருத்து.

இக்குறள் கருத்தை வாங்கி அருமையாகக் காட்டுகிறது திருமந்திரம். 'குலம் ஒன்றே, கடவுளும் ஒருவரே' என்னும் தம் கருத்தை இணைத்து அத்துடன்நல்லகதிக்கு சிவனேசிறந்தவன்; அவனையே நெஞ்சில் நிறுத்துக. எமபயமும் இதனால் நீங்கும் என்கிறது திருமந்திரம்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லை நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந்து உய்மினே. (21.4)

என்று திருமூலர் பாடுவது காண்க.

முடிவுரை :

திருமூலர் தம் கோட்பாட்டிற்கு அரணாகத் திருக்குறளை மேற்கோளாக ஆள்கிறார் என்றாலும், ஒப்பாய்வில் நின்று காண்கையில் பல உயரிய கருத்துக்கள் வெளிப்படும் என்று தெரிகிறது.

'அகர முதல்' என்பதனை 1751, 1753, ஆம் எண்ணுள்ள திருமந்திரப் பாடலும், 'கற்றதனால் ஆய பயன்' என்பதனை 319 ஆம் எண்ணுள்ள திருமந்திரப் பாடலும் ஆள்கின்றன. இதுபோல் முப்பதுக்குமேற்பட்ட திருமந்திரங்களில்திருக்குறள் கருத்துக்கள் பொதிந்துள்ளன. குறளின் தாக்கம் என்று இதனைச் சிலர் குறிப்பர். தாக்கமும் ஒப்பிலக்கியத்தின் ஒரு தலையாய கூறுதான்.

குரு லிங்க சங்கமம்

" ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் "

என்ற திருமந்திர வாசகத்தை சிந்திக்கும்போது கயிலைக் குருமணி அவர்களோடு இணைத்துக்காணும் திருவருள் எண்ணம் உண்டாயிற்று. ஒன்று என்பது சிவத்தைக் குறித்தது. இரண்டாவது பெருமானின் அருளை விளக்கிற்று. " அருளது சத்தியாகும் அரன் தனக்கு ", என்பது சித்தியார்வாக்கு. மூன்றினுள் நின்றனன் என்பதில், இறைவன் மூன்றுவதாகிய சங்கம வடிவங்களில் தோன்றி நின்று அருளுவன் என்பது விளங்குகின்றது. அத்தொடரைப் பிறிதோர் வகையில்பொருள் காண்கையில் மூன்றினுள் நின்றனன் என்பதற்கு இறைவன் குரு, லிங்க, சங்கமம் என்ற மூன்று வடிவங்களில் தோன்றி நிற்பான் என்றும் பொருள் காணலாம்.

கயிலைக் குருமணி அவர்கள் முதலில் இங்கே சங்கமராக (அடியாராக) விளங்கி, ஞானபீடம் ஏற்றபின் குருவாக அருள் விளக்கஞ்செய்து, முத்திப்பேறு எய்திய நிலையில் இன்றுஇங்கே இலிங்கத் திருமேனியில் விளக்கத் முற்றுத் திகழ்கின்றார்கள். நின்றனன் மூன்றனுள் என்ற திருமந்திரத் தொடர் கயிலைக் குருமணி அவர்களுக்குப் பொருந்திவரும் இயைபு திருவருளால் நம் சிந்தனையில் உதித்தது. அதனால்தான் அவர்கள் நினைவைக் குரு, லிங்க, சங்கமத் திருநாளாகக் கொண்டாடுகின்றோம்.

— திருஅருட்செய்தி.

மணிக்கடலில் முகந்த - சில முத்துக்கள்

டாக்டர் திருமதி. ப. நீலா, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.
முதல்வர், தருமை ஆதீனக் கலைக் கல்லூரி, தருமபுரம்.

(மலர் 49. இதழ் 9. பக்கம் 438 இன் தொடர்ச்சி.)

இயற்கையின் இரக்கம் :

மிக உயர்ந்தவர்களுக்குத் துன்பம் வரும்போது உயர்திணை மட்டுமல்ல, அஃறிணையும் கூட ஆழ்ந்த அனுதாபம் காட்டுவதாகக் கவிஞர்கள் பாடுகின்றனர். சிந்தாமணியில் சீவகன் கேமசரியை விட்டுப் பிரிந்து செல்கின்றான். சுனைகளையே கண்களாக - குவளைகளை விழிகளாகக் கொண்ட மலை அருவி நீரைக் கொட்டித் தன் அனுதாபம் காட்டுகிறது.

> சுனைகள் கண்களாகச் சூழ்ந்த குவளைவிழியா
> வனைய லாகா வுருவ நோக்கி மைந்தற் கிரங்கி
> இனைவ போலும் வரையின் அருவி.
>
> (சிந். 1417)

கம்பர் இரண்டுகருத்துகளை இதிலிருந்து எடுத்தார். வனையலாகா வுருவம் - வாலியின் வாக்கில் 'ஒவியத்து எழுத ஒண்ணு உருவத்தோய்!' என்ற விளியாக இராமனைப் பார்த்தமைந்தது. இராமன் காடேகும் போது இயற்கையும் அவலித்த பாங்கைத் தேவரையொட்டிக் காட்டுகிறார். பசுவும் அதன்கன்றும் பரிதவித்தன. பூக்கள் அழ - புனலில் வாழ் புட்கள் அழுதன. காக்கள் கள்ளொழுக நின்றன. அன்னியமான இவைகளோடு கூட அவர்கள் அரவணைப்பிலிருந்து கிள்ளை - பூவைகளும் அழுதன. ஏன்! ஊன் முற்றுப் பிள்ளைகளே அழுதனர் என்று அவலத்தின் உச்சத்தைக் காட்டினார் கம்பர்.

> ஆவும்அழுத அதன்கன்றழுத அன்றலர்ந்த
> பூவும்அழுத புனல் புள்ளழுத கள்ளொழுகும்
> காவுமழுத களிறழுத கால்வயப்போர்
> மாவும் அழுத. (கம். 1703(

கிள்ளையொடு பூவையழுத கிளர்மா டத்து
உள்ளுறையும் பூசையழுத உருவறியாப்
பிள்ளையழுத. (கம். 1701)

வள்ளல் வனம் புகுவன் என்றுரைத்த மாற்றத்தால் என்பது இராமாயணக்காட்சி.

அசுணநன்மா :

இதனை விலங்கென்றும் பறவையென்றும் துணியமுடியாத படி குறிப்புகள் இருந்தாலும் இசைக்கு மகிழும் இதனியல்பை எல்லா இலக்கியங்களும் ஒருபடித் தாய்க் கூறுகின்றன. சிந்தா மணியில் பதுமையின் துயர்கண்டு மன்னன் தேவி திலோத்தமை பலவாறு ஆறுதல் கூறினாள். தாமரை மலர் மேல் விளையாடிய அன்னம் அங்குள்ள நீலமலரை ஒருபோதும் நீங்காது அப்படியே சீவகனும் பரத்தையரை நச்சமாட்டான் என்ற வார்த்தையைக் கேட்டு இனிய இசை கேட்ட அசுணம்போல பதுமை மகிழ்ந்தாள் என்று வருகிறது.

பொன் விளைத்த புணர்முலை யாள்சொல
இன்ன ளிக்குரல் கேட்ட அசுணமா
அன்ன ளாய் மகிழ்வு எய்துவித்தாள். (சிந். 1402)

கம்பரும் அசுணத்தின் இயல்பை அறிந்து இதேயுமைப்பில் பாடுகின்றார். இதுவரை நல்ல கவிதைகளைக் கேட்ட சான்றோர் களின் செவிக்கு என்பா எப்படி இருக்கும்? அசுணமா பறை யொலிகேட்டு வருந்துவது போலத்தான் இதுவும் என்று உவமையாக இச்செய்தியைக் காட்டுகிறார்.

யாழ், நறையடுத்த அசுண நன்மாச் செவிப்
பறை யடுத்தது போலுமென் பாஅரோ. (கம். 8)

மெல்லிலை :

சாப்பிட்ட பிறகு மெல்லுவதற்குரிய இலையை 'மெல்லிலை' மெல்லடகு என இலக்கியம் காட்டும். தன்மை காட்டுவதான பாசடகு என்பதும் இதையே குறிக்கும். மக்களின் நிறைவான வாழ்வைக் காட்டுவதற்குத் தேவர்,

சண்பக நறுமலர் மாலை நாறுசாந்து
ஒண்பழுக் காயினோ டுருவ மெல்லிலை
உண்பதம் யாவர்க்கும் (சிந். 1441)

ஊனமின்றிக் கிடைப்பதாகப் பாடினர். கம்பர் இன்பமான வாழ்விற்கு இனிமை சேர்க்கும் மெல்லடகை தக்க இடத்தில் நினைவுபடுத்துகிறார். விருந்தோம்பும் சிறப்பும் மனைவியால்தான் நிறைவுபெறும். பிரிந்திருக்கும் இந்நேரத்தில் இராமனுக்கு உணவருந்தியபின் தரும் வெற்றிலைப் பணியை யார் செய்வார்கள்? எனச் சீதை எண்ணி ஏங்குவதாகச் சுட்டுகிறார்.

அருந்தும் மெல்லடகு யாரிட அருந்தும்
விருந்து கண்டபோது என்னுறுமோ எனவிம்மும்
(கம். 5083)

திசைமாறும் தினகரன்!

கிழக்குதிக்கும் கதிரவனை நாமறிவோம். சீவகன் தக்கநாடு செல்லும் போது சூரியனைப் போல இருந்தான் என்பதைச் சிந்தாமணி சுவையோடு காட்டுகிறது. ஆனால் தென்றிசையிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் சூரியனைப் போல என்று வித்தியாசமாக செய்தி கூறப்பட்டது.

தென்றிசை முளைத்ததோர் கோலச் செஞ்சுடர்,
ஒன்றிமற் றுத்தரம் வருவ தொத்து. (சிந். 1459)

கம்பர் வடதிசையிலிருந்து அனுமன் தென்னிலங்கை நோக்கி வந்த காட்சிக்கு இதே உவமையைப் பயன்படுத்தினர். அது மட்டுமல்ல. எலும்பில்லாத உயிர்களை வெயில் வருத்துவது போல - வெயிலவனை அனுமன் இராமனிடம் அன்பில்லாத அரக்கரை வருத்தவும் போனன் என்பதையும் இணைத்து உவமையை முற்றுவமையாக்கருதவும் கற்பனையில் இடந்தந்தார்.

தடக்கை நாலைந்து பத்துத் தலைகளும் உடையான்தானே
அடக்கி ஐம்புலன்கள் வென்ற தவப்பயன் அறுதலோடும்
கெடக் குறியாக மாகம் கிழக்கெழு வழக்குநீங்கி
வடக்கெழுந்து இலங்கை செல்லும் பரிதிவானவனு
மொத்தான் (கம். 4766)

யாழிற்கு மாலை சூட்டுவது!

தொழிலுக்குரிய ஆயுதங்களைத் தெய்வத்தன்மையுடையதாகக் கருதுவதும், அவற்றுக்கு முறையான வணக்கம் செலுத்துவதும் பூசை செய்வதும் அக்காலத்திய மரபாக இருந்தது. புறநானூற்றில் வல்வேல் சாத்தன் மாய்ந்தபின் இந்த முல்லை ஏன் பூக்கிறது? இளையோரும் வளையோரும் கொய்ய

மாட்டார்களே! யாழ்மருப்பின் மெல்ல வாங்கி பாணனும்தூட்ட மாட்டானே! என்ற குறிப்பைப் பார்க்கிறோம். (புற. 242) இன்னொருபாடல் 'நரந்தப் பல்லிதழ்க் கோதைசுற்றிய, ஐதமை பாணி வணர்கோட்டுச் சீறியாழ்! எனவருகிறது. (புற. 302)

> சிந்தாமணி கோல மாலையைப், பேரிசை வீணையிற்
> தூட்டிப் பெண்கொடிக், காரிகை யுலகுணர் கடவுட்
> பாடுமே. (சிந். 1466)

என்று காட்டுகிறது. கம்பராமாயணத்தில் அகலிகைப் படலத்தின் மிகைப்பாடலில்.

> 'அன்ன மாலையை யாழிடைப் பிணித்து.' (கம். 101)

என வருகிறது. (வளரும்)

இப்படி இருக்கலாமா!

2—9—1990 மயிலாடுதுறையின் பெரிய கோயிலுக்குக் குடமுழுக்கு நடந்தது. பொதுவாகச் சிவன் கோயிலையே பெரிய கோயில் என்கிற பழக்கம் உள்ளது. பெரியவன் என்ற வார்த்தைக்கு உரியவன் சிவனே. 'பெரியோன் தருக திருநுதலா கென' – (சிலம்பு) அம்மை மயில்வடிவுகொண்டு பூசித்ததால்– மயிலாடியதுறையை மயிலாடுதுறை என்றனர். மயிலின் சிறப்பைத் திருப்புகழ் பலபடக் காட்டுகிறது. அதனைக் குதிரை என்றே வருணிக்கிறது. ஆடும்பரி என்றும், பட்சியெனும் உக்ர துரகம் என்றும் கூறுவதோடு அதனை மந்திர வடிவமுடையது என்றும் காட்டும்.

> ஆன தனிமந்த்ர ரூபநிலை கொண்டது
> ஆடுமயி லென்ப தறியேனே.

இத்தகையமயில் வடமொழியில் மயூரமென்று அழைக்கப்படும். அழகாலும், கம்பீரத்தாலும் முருகனின்வாகனமான சிறப்பாலும் ஏற்றம்பெற்ற மயிலுக்கிணையான பறவைகளே உலகில் இல்லை. அதனை இப்படி மாற்றிச் சொல்லிப் பார்க்கலாம். ஆயிரம் பறவை வந்தாலும் மயூரத்திற்கு ஈடாகாது. ஆயிரமானாலும் மயூரமாகாது – மயூரம் மாயூரமாகி – பின் இவ்வூருக்கே இந்த மொழியை ஏற்றிச் சொல்லிவிட்டார்கள். இப்போது ஆயிர மானாலும் மாயவரமாகாது – என்ற பொருள் விளங்கித் தோன்றுகிறதல்லவா!

(ப. நீலா)

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்
தருமபுரம்.

(மலர் 49. இதழ் 8. பக்கம் 387 இன் தொடர்ச்சி.)

சிவஞானபோதத்தின் இரண்டாம் சூத்திரம், உயிர்களோடு இறைவன் ஒன்ருய், வேருய், உடனுய் இருக்கின்ருன் என்று கூறுகிறது. இந்நூற்பாவின் முதல் அதிகரணத்தின் முதல் வெண்பா, இறைவன் ஒன்ருய் விளங்குமாற்றை இயம்புகிறது. உடம்பும் உயிரும் எங்ஙனம் ஒன்ருயிருக்கிறது என்பதை விளக்கி, அதுபோன்று இறைவனும் உயிர்களோடு ஒன்ருய் இணைந்திருக்கிருன் என்றருளுகிருர் மெய்கண்டார்.

ஒருவருக்குச் சாத்தன் என்று பெயர் உள்ளது. அவர் தொலைவில் நின்று கொண்டிருக்கிருர். அவரின் பெயரைச் சொல்லி ஒருவர் அழைக்கும் பொழுது, அவர் உடல் திரும்பி ஏன் என்று கேட்கிறது. கேட்கும் உருவம் என்னவோ உடல் தான்; ஆனுல் உடலா கேட்கிறது. அதற்குள் இருந்து இயங்கு கின்ற உயிரன்ருே கேட்கிறது. இங்ஙனம் உடலோடு ஒட்டி நின்று செயல்படும்உயிரைப்போல, இறைவனும் உயிர்களோடு ஒன்றியிருக்கிருன் என்பது கருத்து. அப்படியானுல் இறைவன் உயிரே ஆகிவிடுவானே? என்னும் கேள்விஎழுகிறது. அதற்குப் பதில், இறைவன் உயிர்களோடு ஒன்றி யிருப்பினும் அவன் உயிராக ஆகிவிடமாட்டான்; உயிரும் அவனுக ஆகிவிடாது. அவ்விறைவன் ஒன்றியிருக்கும் பொழுது உயிராயும், பிரிந் திருக்கும் பொழுது வேருயும் நிற்பன் என்றுணர்தல்வேண்டும். இக்கருத்துக்களை,

" கட்டும் உறுப்பும் கரணமும் கொண்டுள்ளம்
இட்டதொரு பேர் அழைக்க ஏன் என்றாங்கு—ஒட்டி
அவன் உளமாகில்லான்; உளம் அவனுமாட்டாது
அவன் உ்ளமாய் அல்லனுமாம் அங்கு "

என்னும் வெண்பா கூறுகிறது. இதற்கு அடுத்த வெண்பா, வேதம், 'ஏகம்' என்னும் சொல்லையும் 'அத்துவிதம்' என்னும்

சொல்லையும் என்ன என்ன பொருளில் கையாளுகின்றது என்பதைவிளக்குகிறது. 'ஏகம்' என்பது. இறைவன் 'ஒருவனே' என்னும் பொருளிலும் 'அத்துவிதம்' என்னும் சொல், (அவன் ஒருவனே ஆயினும்) உயிரும் இறைவனும் வேறுவேறாகி விளங்கியிருந்து, ஒருநிலையில் இரண்டற்றவாறு கலந்துள்ளன என்னும் பொருளிலும் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டு அற்ற நிலையில் கலந்துள்ளன என்பதால், ஒரு பொருளே ஆகிவிட்டன என்று கொள்ளல் கூடாது. இதற்கு உதாரணம் கூறவேண்டும் எனில் இரட்டைப் பழத்தைக் கூறலாம். "இரண்டு பழம்" என்பது வேறு; "இரட்டைப் பழம்" என்பது வேறு. இரட்டைப் பழம் என்றால் ஒருபழம் என்பதும் இல்லை; இரண்டு பழம் என்பதும் இல்லை. இரண்டும் இரண்டு அல்லாததும் ஆனது என்பது கருத்து. அதுபோல, "அத்துவிதம்" என்னும் சொல் சித்தாந்தத்தின் கருத்தின்படி இரண்டும் இரண்டு அல்லாததும் என்னும் பொருளில் கையாளப்படுகிறது என்னும் நுட்பத்தைக் கருத்தில் கொள்ளல் வேண்டும். மெய்கண்டார், வேதமும் இப்பொருளில்தான் ஆளுகிறது என்கிறார். அதனால்தான் அவ்வேதம், 'ஏகம்' என்றுகூறுவதோடு 'அத்துவிதம்' என்றும் கூறுகிறது என்கிறார். எனவே, "இறைவன் ஒருவன்" என்னும் தொடரில் இறைவன் எண்ணிக்கையில் ஒருவனாய் இலங்குகின்றான் என்பதே பொருள். அன்றிப் பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்று என்னும் பொருளில் இச்சொல் பயன்படுத்தப்படவில்லை. ஜீவாத்மா, பரமாத்மாவிடமிருந்து ஒன்றாயிருந்து பிரிந்தது என்பதுண்மையாயின், இதனிடம், இத்துணை குறைகள் இருப்பது எப்படிப்பொருந்தும்? இவ்வுயிர், (ஜீவாத்மா) பாசத்தோடு கட்டுண்டு கிடத்தலும், இறைவன் இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியிருத்தலும் ஆகிய இலக்கணங்கள் தனித்தனியே இருக்கும் பொழுது பரமாத்மாவிடமிருந்து ஜீவாத்மா பிரிந்தது என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்? ஒரு சந்தனக் கோலிலிருந்து ஒரு துண்டினை வெட்டி எடுத்தோம் எனில், அத்துண்டுக்கோலும் சந்தனக்கோலாகவே இருக்குமல்லாது பிரப்பங்கோல் ஆகுமா? அதுபோன்று எண்குணங்களையுடைய இறைவனிடமிருந்து பிரிந்த உயிர் இவ்வளவு குற்றங்களையுடையதாக இருப்பது எங்ஙனம் பொருந்தும்? எனவே இறைவன் வேறு; உயிர் வேறு என்பதே கருத்தாகிறது. இக்கருத்து விளங்கியவுடன், பிறிதொரு கேள்வி எழுகிறது; அங்ஙனம் எனில், வேதம், இறைவனும் உயிரும் ஒன்று (அத்துவிதம்) என்று கூறுவது எதன் அடிப்படையில்? என்பது வினா. எழுத்துக்களை இயக்குவிக்க அகரமானது எங்ஙனம் துணைசெய்கிறதோ அதுபோன்று, உயிர்களை

இறைவனும் ஒன்றியிருந்து இயக்குகின்றான் என்பது கருத்து. இச்செய்திகளை,

" ஒன்றென்றது ஒன்றேகாண்; ஒன்றேபதி; பசுவும்
ஒன்றென்ற நீயாசத்தோடு உளேகாண்—ஒன்றினால்
அக்கரங்கள் இன்றாம், அகரவுயிர் இன்றேல்
இக்கிரமத் தென்னும் இருக்கு "

என்னும் வெண்பா விளக்குகிறது. இவ்வெண்பா மூலமாக இறைவன் வேறாயிருத்தல் விளக்கப்படுகிறது. இனி, இறைவன் உடனாய் இருத்தலை அடுத்த வெண்பா மூலம் கூறுகின்றார் ஆசிரியர். பண்ணும் அதனுடைய ஓசையும் போல, பழமும் அதனின் சுவையும்போல எல்லாப் பொருள்களிடத்தும் இறைவனானவன் பிரிப்பின்றி நிற்கிறான்; அதனால் அருமறைகள் 'ஏகன்' என்னாது 'அத்துவிதம்' என்று கூறுகின்றன என்கிறார். இக்கருத்துக்கள்,

" பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணும் சுவையும் போல் எங்குமாம்—அண்ணல்தாள்
அத்துவிதமாதல் அருமறைகள் ஒன்றென்னாது
அத்துவிதம் என்றறையும் ஆங்கு "

என்னும் வெண்பா மூலம் விளக்கப் பெறுகின்றன.

இதுவரை சிந்தித்த கருத்துக்களால், இறைவன் உயிர்களோடு ஒன்றாய், வேறாய், உடனாய் இருக்கின்றான் என்று தனித்தனியே கூறியபொழுது ஓர் ஐயம் தோன்றுகிறது. இங்ஙனம் இறைவன் மூன்றுவித நிலையில் இருக்கின்றான் என்பதை இப்படிப் பல உவமைகளில்வைத்து விளக்குவதனால் இது அநேகாந்த வாதமாய் முடியும் என்று அபேத வாதிகள் தடை நிகழ்த்துவர். இதற்கு விளக்கமாக அடுத்த வெண்பா கருத்துக் கூறுகிறது.

அரக்கை உருக்கி, சேர்த்து ஒன்றாக்கப்பட்ட கற்பொடி, அவ் அரக்கோடு ஒன்றாய் ஒருங்கு இயைந்து நின்றாற்போல, இறைவன் உயிர்களோடு ஒருங்கு கூடி அவற்றினின்று பிரிப் பின்றித் தானேயாகியும் (வேறாகியும்) உலகேயாகியும் (ஒன்றாயும்) தானே உலகே ஆகியும் (உடனாகியும்) நிற்கிறான். இக்கருத்து உண்மையாயின், வாமதேவர் முதலிய முனிவர்கள், 'யானே எல்லாம் ஆயினேன்' என்றுகூறுவது எப்படி? என்னும்

கேள்வி எழுகிறது. அதற்குரிய விடையினை அடுத்துக் கூறுகின்றார். பாசப்பிணிப்பினின்று நீங்கித் தனியே நிற்கின்ற உயிரிடத்து, இறைவன் சோகம் பாவனையால் புகுந்து நான் அவனே ஆகும்படி நிற்கிறான் ஆதலால், இத்தகைய முத்திக் காலத்தில், யானே எல்லாம் ஆயினேன் என்று நானும் கூறுவேன் என்கிறார் மெய்கண்டார். இக்கருத்துக்களை,

" அரக் கொடு சேர்த்தி அனைத்த அக்கற்போல்
உருக்கி உடங்கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே உலகாம்; தமியேன் உளம்புகுதல்
யானே உலகென்பன் இன்று "

என்னும் வெண்பா விளக்குகிறது.

அடுத்து, வினையென்று ஒன்று இல்லை என்று கூறும் நாத்திகரின் வாதத்திற்கும், வினையே எல்லாவற்றையும் செய்து விடும்; கருத்தா (இறைவன்) என்று ஒன்று வேண்டுவதில்லை என்று கூறும் பௌத்த சமண மீமாஞ்சகர் கருத்திற்கும் விடை கூறுகிறார்.

சஞ்சிதம் என்னும் பழவினையே இன்ப துன்பப்பயன்களையும் அவற்றை அனுபவிக்க உதவும் உடம்பினையும் தோற்றுவிக்கும்; அவ்வுடம்பின் கண் உயிரானது சென்று பொருந்தும்; இங்ஙனம் ஒவ்வொரு பிறவியிலும் ஏற்படும் எனில் அது பொருந்தாது. வினைகள் சடம் ஆதலின், அவற்றிற்குத் தம்மைச் செய்தோரை அறிந்து கொள்ளும் ஆற்றலும், அவற்றிற்கேற்ற பயனை வகுத்துக் கொள்ளும் திறனும் அமையாது. எனவே இறைவனே வினைகளை உயிரோடுநிலையறிந்து கூட்டுவிக்கிறான். உழவுத்தொழில் தானே நிலத்தில் நின்று பயன் தராது. அதனைச் செய்வோர் செய்யும்போது மட்டுமே பலன்தரும் என்பதுபோல இதனையும் கொள்ளல் வேண்டும் என்று மெய்கண்டார் கூறுகிறார். இக்கருத்துக்களை,

" உள்ளதே தோற்ற உயிர்அணையும் அவ்வுடம்பின்
உள்ளதாம் முற்செய்வினை உள்ளடைவே; — வள்ளலவன்
செய்வர் செய்திப் பயன்விளைக்கும் செய்யேபோல்
செய்பவன்; செயல் அணையா சென்று "

என்று விளக்குகிறார்.

(தொடரும்)

ஸ்ரீ உமாமகேசமூர்த்தி

வித்துவான் திரு. வி. சா. குருசாமிதேசிகர், எம். ஏ.,
தருமபுரம்.

(தியான சுலோகம்)

தவளாப ஸுகாஸந ஸந்நிஹிதம்
ம்ருக டிம்பக டங்க வராபயதம்
ஸுமுகம் பரமுத்பலத்ருக் வரதம்
உமயா ஸஹிதம் ப்ரணமாமி பவம்.

பொழிப்புரை :

வெண்ணிறமுள்ளவரும், சுகாஸனமாக அமர்ந்திருப்பவரும், மான், மழு, வரத, அபயஹஸ்தம் உள்ளவரும், ப்ரஸந்நமான முகத்தை உடையவரும், உத்பலத்தைக் கையிலுடையவரும், பார்வதி தேவியோடு கூடியவருமான ஸ்ரீ உமாமஹேச்சுவர மூர்த்தியை நமஸ்கரிக்கின்றேன்.

விளக்கம் :

உலகமாதாவாகிய உமையம்மை மலரும் மணமும்போலப் பிரிவின்றிச் சிவபெருமான் ஐந்தொழில் இயற்றுவதற்குத் துணை நிற்பாள் ஐவகைச் சத்தியாய் நின்று உயிர்களை ஆட்கொண்டருளுவாள். ஐவகைச் சத்தியாவார் – பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி ஆகியோராவர். பராசக்தி பக்குவமுள்ள உயிர்களுக்குக் கருணையோடு அருள்புரிவார். ஆதிசக்தி உயிர்கட்குப் பொருள் நுகர்ச்சியையும், இச்சாசக்தி விருப்பத்தையும், ஞானசக்தி அறிவையும், கிரியாசக்தி செயலையும் தந்தருளுவர். இறைவன் உலகில் ஐந்தொழில் நிகழ்த்தியருளுவதற்கு உமையம்மையோடு கூடி நிற்கும் நிலையில் உமாமகேசுவரர் என வழங்கப்பெறுவார்.

'பதியிலார்

வித்யாவாசஸ்பதி, டாக்டர் திரு. இரா. நாகசாமி.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் மணந்து கொண்ட பரவை என்பவள் 'பதியிலார்' குடும்பத்தைச் சேர்ந்தவள். திருவாரூர்க் கோயிலில் நாட்டியப் பணிபுரிந்தவள். இவரது பதியிலார் குடும்பத்தை 'உருத்திரகணிகை' என்றும் கூறுவர். இதை சேக்கிழார் தமது பெரியபுராணத்தில்,

" கதிர்மணி பிறந்ததென்ன உருத்திரகணிகை மாராம்
பதியிலார் குலத்தில் தோன்றிப் பரவையார் என்னு நாமம்
விதியுளி விளக்கத்தாலே மேதகு சான்றோர் ஆன்ற
மதியணி புனித நன்னுன் மங்கலவணியால் சாற்றி "

என்று பாடுகிருர். பதியிலார் என்ருல் "தேவரடியார் குலம்" என்றும் கூறுவர்.

தேவரடியார் குலத்தில் மூன்றுபிரிவுகள் உண்டு. பதியிலார், இஷவத்தளியார், தேவரடியார் என்று அப்பிரிவுகளைக் கூறுவர். பதியிலார் - உயர்குடி என்றும், இஷவத்தளியார் என்ருல் நடுத்தரக்குடி என்றும், தேவரடியாள் என்ருல் தாழ்குடிஎன்றும் கூறுவர். திருவொற்றியூரில் இம்மூன்று குடியினரும் இருந்தனர். இவர்களுக்குள் "நான் உயர் குடி; நீ தாழ்குடி" என்று சண்டை ஏற்பட்டது. இதனல் இவர்கள் கோயிலில் தங்களது பணியைச் செய்ய மறுத்து 'வேலை நிறுத்தம்' செய்தனர். அன்று ஆண்ட அரசன் தனது அதிகாரியை அனுப்பி இவர்களது வழக்கை விசாரித்து இவர்களுக்குள் சமாதானம் ஏற்படுத்தி வைத்தார் என்று அக்கோயிலில் உள்ள 15 ஆம் நூற்ருண்டுக் கல்வெட்டு கூறுகிறது.

"பதியிலார்" என்ருல் என்னபொருள்? இவர்கள் தேவரடியார் பிரிவினைச் சேர்ந்தவர்களாதலின் " பதியில்லாதவர் " அதாவது தனக்கென ஒரு கணவனை மணந்து கொள்ளாமல் வாழ்பவர் என்று பொருள் கூறுவர். இது சரியான பொருளல்ல. இதற்குப் பொருள் விளங்கிக்கொள்ள சம்பந்தர் தேவாரப் பதிகம் உதவுகிறது. சம்பந்தப் பெருமான் தமது வலிவலம் பதிகத்தில்,

" பொதியிலானே பூவணத்தாய் பொன்திகழும் கயிலைப்
பதியிலானே பத்தர் சித்தம் பற்று விடாதவனே
விதிஇலாதார் வெஞ்சமணர் சாக்கியர் என்று இவர்கள்
மதிஇலாதார் என்செய்வரோ வலிவலம் மேயவனே "

என்று பாடுகிறார். 'பொதியமலையில் குடியிருப்பவன்' என்னும் கருத்தில் 'பொதியிலான்' என்னும் கயிலைமலையை குடிகொண்டவன் என்னும் கருத்தில் " கயிலைப்பதியிலான் " என்றும் பாடுகிறார். இங்கு பதியிலான் என்றால் பதியில்லாதவர் என்று பொருள் அல்ல. மாறாக பதியைச் சார்ந்தவர் அல்லது 'பதியுடையர்' என்பதேபொருள். ஆதலின் பண்டைநாட்களில் 'பதியிலாள்' எனில் கணவன் இல்லாதவள் என்று பொருள் அல்ல. 'பதி' என்றால் புண்ணிய பதியாகிய கோயில் என்று பொருள். 'இல்' எனில் குடி என்பது பொருள். "இற்குடி பிறந்தார்" என்னும் குறள் காண்க. பதி+இல்+ஆள் எனில் கோயில் குடியான பெண் என்பதே பொருள்.

இதைப் பாகுபடுத்திக் கூறவே சம்பந்தப் பெருமான் முன் கூறிய பாடலில் பின் இரண்டு அடிகளில் 'விதி இலாதார்' என்றும், "மதி இலாதார்" என்றும் பாடுகிறார். இல்லாதவர்என்ற பொருளில் விதிஇலார் என்றோ, மதிஇலார் என்றோ பாடாமல் விதிஇலாதார் என்றும், மதிஇலாதார் என்று பாடுகிறார்.

பதிஇலாள் குடியைச் சார்ந்த பரவை கோயிற் குடியைச் சேர்ந்தவள் என்பதே பொருள்.

கந்த சஷ்டி விரதம்

ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் பிரதமை முதல், சஷ்டி வரை விரதம் மேற்கொள்ள வேண்டும். ஆறு நாட்களும் உண்ணா நோன்பிருத்தல் மிகச் சிறப்பு. ஒன்று முதல் ஐந்து நாட்கள் ஒருபொழுது உணவு கொண்டு ஆறும் நாள் முழு உண்ணாநோன்பும் இருக்கலாம். 6 ஆண்டுக் காலம் இவ்விரதம் மேற்கொள்ள வேண்டுவது சிறப்புடைத்தாம்.

சைவ சித்தாந்தக் கல்லூரி ஓர் அன்பர் கடிதம்

" தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே "

— திருமூல நாயனரின் திருமந்திரம்.

" முந்திய ஒருமையாலே மொழிந்தவை கேட்டல் கேட்ட
சிந்தனை செய்தல் உண்மை தெளிந்திடல் அதுதானக
வந்தவா றெய்தல் நிட்டை மருவுதல் என்று நான்காம்
இந்தவா றடைந்தோர் முத்தி எய்திய இயல்பிஞேரே "

— உமாபதிதேவ நாயனரின் சிவப்பிரகாசம்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் திவ்ய சமூகத்திற்கு, அடியேனின் நன்றி கலந்த வணக்கங்களை முதற்கண் சமர்ப்பிக்கின்றேன். எங்களைப்போன்ருேர் உய்யவேண்டும் எனும் நோக்கில் தங்களின் அருட்கொடையால் ஆரம்பிக்கப்பட்ட "சைவ சித்தாந்த மாலை நேரக் கல்லூரி"யில் முதலாம் ஆண்டு பயிலும் மாணவன் என்று என்னை தங்களின் திவ்ய சமூகத்திற்கு அறிமுகம் செய்துகொள்வதில் மிகவும் பெருமிதப் படுகின்றேன்.

தமிழகத்தில் பிறந்து 40 ஆண்டுகளாக வளர்ந்தும், சைவ சித்தாந்தத்தினை முறைப்படி பயிலும் வாய்ப்பு இதுபோன்ற மாலைநேரக் கல்லூரிகள் இல்லாமையாலேயே, "நான் உண்டு; வீடுண்டு; அலுவலகமுண்டு" என்று நாட்களை வீணே கழித்தேன்.

தங்கள் ஆதினம் நடத்தும் மாலைநேரக் கல்லூரியைப் பற்றி அறிந்தேன். ஆர்வம் மிகக்கொண்டேன். என்னேடு நின்று விடாமல், மனைவி, மக்களையும் நமதுமுன்னேர்களின் அற்புதக் கருத்துக்களை பதினன்கு சாத்திரங்களின் வாயிலாகக் கேட்டுப் பயனடைய, கல்லூரியில் சேர்த்துள்ளேன். இக்கடிதத்தை எழுதும் முக்கியநோக்கமே, தங்கள் சமூகத்திற்கு இவ்வெளியேனின் நன்றிகளைத் தெரிவிக்கும்பொருட்டே ஆகும்.

எத்துணை அறிவியல் பூர்வமாக நம்முன்னேர்கள் நம்மைப் பற்றியும், நாம் வாழ வகைசெய்யும் உலகைப் பற்றியும், இவைகளை இயக்கும் இறைவனைப் பற்றியும் சிந்தித்து உள்ளனர் என்பதை இவ்விரு ஆசிரியர்களின் வாயிலாகக் கேட்டு

வியப்படைகின்றது அறிவு. நம்மறிவு எத்தகையது என்பதை அறிந்தபோது கூனிக்குறுகினேன். "உண்மை விளக்கத்தைப்', படிக்கும்போதே இப்படியென்ருல், பதினுன்கு சாத்திரங்களை யும் கற்றுத் துறை போகிவிட்டால்...! என்னென்று சொல்வது! பிறவிப் பயனைப் பெற்றுவிட்டேன். அல்ல அல்ல – "பிறவிப் பயனைப் பெற்றுவிடச் செய்துவிட்டீர்கள்" என்றே உணர வேண்டிவரும்.

அடியேனுக்குள்ளஎண்ணமெல்லாம், இதுபோன்றகல்லூரி களை பெரு நகரங்களில் மட்டும் செயல்படுத்துவதோடு நின்று விடாமல், தமிழகத்தின் மூலைமுடுக்குகளில்எல்லாம் ஆரம்பித்து, தமிழக மக்களை, ஏன் உலக மக்கள் அனைவரையும் உய்யுமாறு செய்திட தாங்களே வழி வகுத்துவிடவேண்டும். எங்களைப் போன்ருேர் எண்ணி என்ன பயன்?

தங்களைப் போன்ற மகாசந்நிதானங்களைப் பெற்ற நாங்கள் பெரும் பேறு பெற்றவர்களாவோம். தங்கள் பணியில் எங்களை நாங்கள் ஈடுபடுத்திக்கொண்டு அயராது பாடுபடுவோம். என்ற உறுதி நிறையவே உள்ளது. ஆனல், அதற்கு நிலைக்களமாகக் கல்லூரி அவசியம் தேவைப்படுகிறது. எங்களின் வாழ்க்கை யைச் சீராக வகுத்துக் கொண்டு செம்மையுற வாழ்வதற்கு இது போன்ற கல்லூரிகள் நிச்சயம் தேவை.

ஆசிரியப் பெருமக்களும் மிகவும் உறுதுணையாய் உள்ளனர். கற்றறிந்த அவர்கள், அவர்களின் நிலையில் நின்று விடாமல், எங்கள் நிலைக்கு இறங்கிவந்து, சைவ சித்தாந்தக் கருத்துக்களை மனதில் பதியும் வண்ணமும், வாழ்க்கைக்கு அது எத்துணை அவசியம் என்பதை ஒத்துக்கொள்ளும் வகை யிலும், எளிமையாகவும் புரிய வைக்கின்றனர். அவர்களுக்கு எவ்வாற்ருன்தான் இவ்வெளியேன் நன்றி காட்ட வல்லனே!

அனைத்திற்கும்மேலாக தங்கள் சமூகத்திற்கு யாது கைமாறு காட்ட வல்லவனே! செய்வகை அறியேன். கல்லூரியின் நோக்கத்தை நிறைவேற்ற நன்கு பாடுபடுவதே காட்டும் கைம் மாருக இருக்கும்எனின், உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈடுகட்டி, நன்கு படித்து, சார்ந்தோரையும் படிப்பிக்க வைத்து, சமுதாயம் உய்ய, ஒல்லும் வகையில் நிச்சயம் பாடுபடுவேன் என்ற உறுதியைத் தங்களின் திருவடிகளுக்குச் சமர்ப்பிக்கப் பெரிதும் விழைகிறது உள்ளம்.

மீண்டும்மீண்டும் நன்றிகூறி பொன்னர்பாதகமலங்களுக்கு வணக்கமும் செலுத்தி, ஆர்வத்தின் மிகுதி காரணமாய் எழுதி யதால் பிழை இருப்பின் பொறுத்து அருள்பாலிக்கவேண்டும் என்று வேண்டும்.

பா. சாந்தகுமார், பாளையங்கோட்டை.

சீகாழித் தலக்குறிப்பில் செந்தமிழ்ப்பண்பாடு

வித்துவான் திரு. தா. குருசாமி தேசிகர்

மதுரை.

முன்னுரை :

தமிழர் பண்பாட்டில் தலைசிறந்த கொள்கை, புதியவற்றை வரவேற்பது; பயன்படாத பழங்கொள்கைகளை விட்டுவிடுவது. 'பழையன கழிதலும் புதியன புகுவதும் வழுவல' என்றனர். தொன்மை என்பதனால் நன்மை என்றோ, புதிது என்பதனால் தீமை என்றோ கொள்கை வகுத்துக் கொள்ளாதவர்கள் தமிழர்கள். நன்மை தீமை ஒன்றே தமிழர் வாழ்வில் ஆயப் பட்டது. அப்படி ஆய்ந்த தமிழ்மண்ணில் சமணமதம்பௌத்த மதம் கால்கொள்வதாயிற்று. அதுவும் ஒரு வியப்பே!

புதிய தாக்குதல் :

சங்க இலக்கியங்களில் பௌத்த – சமணமதக் கோட்பாடு கள் காப்பியக் கதைகளில் தவழ்ந்து விளங்குகின்றன. புதிய தாக்குதலுக்குத் தமிழர்களில் பலரும் வரவேற்புத்தந்தனர். எனினும் பண்டைத் தமிழரின் 'முன்னெறி' மறையவில்லை; மாதவி பௌத்தத் துறவியானாள்; மணிமேகலை துறவியாகிக் காவியநாயகி ஆனாள். கண்ணகி கோவலன் திருமணம் 'மாமுது பார்ப்பான் மறை வழி' நடந்தது. சிவநெறி திருமால்நெறி சிலம்பில் உரியமுறையிற் பேசப்பட்டாலும், அருகநெறி பௌத்தநெறி புதிது என்பதற்காக விடாமல் கடைப்பிடித்த வரையும் 'காட்டி' விவரிக்கப்படுகிறது. 'சிலம்பு' சமயங்களின் சந்திப்பு எனலாம்.

வியப்பு :

தொல்காப்பிய இலக்கண நூலில் உணர்த்தப்படாத கொள்கைகளைத் தமிழர் பௌத்த அருக சமயங்களில் கண்டனர்; துறவிமார்கள் ஊனுண்டல் தீது என்பது அருக சமயக் கொள்கை; துறவியர் ஊனுண்டல் தீதன்று என்பது

பௌத்த மதக் கொள்கை; 'அருளொடு புணர்ந்த அகற்சியார்' ஊனுண்டல் தமிழர்க்கு வியப்பைத்தந்தது. ஊன்உண்டலைத் தீது என்று கூறியவர்கள் சுடுபாறையில் கிடந்து உடலை வாட்டியதும் வியப்பைத் தந்தது. சுடுமண் ஓங்கிய நெடுநிலை மாடங்களில் வாழ்ந்த தமிழர்கள், குகைகளில் வாழ்ந்தவரைக் கண்டு வியப்படைந்தனர் - வாழாதவரைக்கண்டு வியந்து 'வாழ்ந்தவர்' பெருகினர்.

வியந்து போற்றியது :

பௌத்த அருக சமயம் வேத வழியை இகழ்ந்தது; 'கருப் பொருளாகிய கடவுட்கொள்கையை' இரண்டு சமயங்களும் கை கழுவின; கடவுளே இல்லை என்றது பௌத்தம்; சமணம் உண்டும் இல்லையாம் என்று இரண்டாட்டியது; கடவுளைவிட வினையே வலிமையானது என்ற சமணக் கொள்கை தமிழரை வியப்பில்ஆழ்த்தியது; 'ஐ' வியப்பாகும்-என்ற நூற்பாவின்படி பௌத்த-அருக அடிகண்மாரைக்கண்டு தமிழ்மக்கள் வியந்து அவர் வழியைப் போற்றினர். தமிழ்ச் சொற்களைவிட வட சொற்கள் வியப்பைத் தந்தன தமிழர்க்கு!

பொருளொடு புணராமை :

புதியன காணும் வேட்கையில் 'பொருளொடு புணரா வடவரின் இருசமயக் கொள்கைகளும் விரைந்து பரவின சங்கம் மருவியகாலத்தில் சுமாராகப் பரவிய இருசமயங்களும் சிற்றூர்களிலும்நகர்களிலும் பரவலாயிற்று. மன்னரும்போற்றப் புறச்சமயங்கள் நடைபயின்றன. திருஞானசம்பந்தப் பெருமானின் காலம் இருண்ட காலம் என்பர்; எனிலும் திருஞானசம்பந்தர் காலத்தில் சோழன் வலிகுன்றிப்பிற சமயம் புகாமல் வாழ்ந்திருந்தான்; பாண்டியன் நெடுமாறன் பிறசமயம் தழுவினன். மருள்நீக்கியார் மருள் நீங்காமல் அருள்நீங்கி அமணசமயம் சென்றார். சென்ற பிறகுதான் புறச்சமயங்களின் குறைபாடு தெரிந்தன. அவை இரண்டு சமயங்களும் 'பொருளொடு புணராச்சமயங்கள்' என்று முதன்முதலில்உணர்ந்தவர் சிவபாத இருதயர். தமிழர் வியப்பு ஒழியத் தவம் செய்தார்.

படை எடுப்பு :

புறத்தில் பகை கொண்டவரிடம் வெற்றிபெற நால்வகைப் படைநடத்திடுவதுபோல, புறச்சமய இருள் - தமிழ் மக்களை

விழிப்படைய ஒட்டாமல் நடத்துவதைக் கண்டு – ஒருதளபதி வேண்டும் என்று தவம் செய்தார் சிவபாத இருதயர். திருஞானசம்பந்தரைத் திருவருள் வழங்கியது. மதுரையில் சமயப்படை எடுப்பு நடத்திச் சமணரை வென்றார். திருத் தெளிச்சேரியில் புத்தநந்தியோடு வாதிட்டுப் பௌத்தரை வென்றார். சமணரையும், பௌத்தரையும் வரவேற்ற தமிழர்கள், அவர்கள் கொள்கைகள் தவறானவை என்று ஆராய்ந்து முடிவு கூற, திருஞானசம்பந்தர் திருவவதாரம் வரவேண்டியதாயிற்று. அதுவும் ஒருவியப்பே!

வியப்பழித்தது :

திருஞானசம்பந்தரின் சீகாழித் தலக்குறிப்பில் ஒன்று 'சமணரொடு சாக்கியரை வியப்பழித்த விமலன் ஊரே' – என்ற வரியாகும். இவ்வரிமூலமாக தமிழரின் ஏமாளித்தனத்தை – ஆராயாது புதிய கொள்கைகளைத் தமிழர் ஏற்கும் புதுமைத் தனத்தை–வேதநெறிபழிக்கும் வாதத்தைக்கண்டு வியந்ததை அவர்களை முற்றிலும் மதுரையில் ஒழித்ததை உணர்த்தப் படுகின்றது.

முடிவுரை :

'பெரியோரை வியத்தலும் இலமே ; சிறியோரை இகழ்தல் அதனினும்இலமே' என்ற தமிழ்ப்பண்பாடு அழிந்தது. முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும் ஒரு பெற்றிமையான இறைவனை உணராக் கூற்றுகளை ஆயாமல் தமிழர்கள் வினைந்து போற்றி வியந்தனர்; அவ்வியப்பு என்று ஒழியுமோ என்று சான்றோர் செய்த தவம் சீகாழிப் பிள்ளையாரைத் தந்தது. அப் பிள்ளையார் மூலமாகத் திருவருள் தமிழரின் வியப்பை நீக்கியது. இச்செய்தியைத் திருஞானசம்பந்தர் தேவாரம் கூறுகிறது. நாம் அதனைக் கண்டு வியப்படைவோமாக!

" சமணரொடு சாக்கியரை வியப்பழித்த விமலன் ஊரே. "

(திருப்பிரமபுரம் 3 ஆம் திருமுறை)

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் தேவார வைப்புத் தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. பிரமோதூத ஆவணி ஆயில்யநாள் ஆலய வழிபாடு 20—8—90 திங்கட்கிழமையன்று இறையான்சேரி, வரிஞ்சையூர் ஆகிய தலங்களில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமி அம்பாளுக்கு விசேட அபிடேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. ஓய்வு பெற்ற முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாதம் முதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் வழங்கியருளும் அருளுரை 2—9—90 ஞாயிற்றுக்கிழமை மாலை திருமுறைப் பாராயணத்துடன் நடைபெற்றது.

முப்பெரும் புராணங்களின் பெருமை, திருவிளையாடற் புராணம் மாலையில் தொடங்குவதன் சிறப்பு முதலியவற்றை மனங்கொள விளக்கியருளினார்கள். ஆதீன அடியார்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அன்பர்கள் கேட்டுப் பயன் பெற்றனர். அடுத்த அருளுபதேசம் 7—10—90 அன்று காலை நடைபெறும்.

திருமுறை வேள்வி

சிவபெருமானுக்கு மிக உகந்த திருவாதிரை நாளில், மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய 8 ஆம் திருமுறை முற்றோதல் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான திருப்பெருந்துறை ஸ்ரீ ஆத்மநாத சுவாமி திருக்கோயில் சந்நிதியில் 17—8—90 வெள்ளிக்கிழமை யன்று காலை 8-00 மணிக்குத் தொடங்கி மாலை 7-00 மணியளவில் நிறைவு பெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் மாலையில் எழுந்தருளி வழிபாடு ஆற்றி 8 ஆம் திருமுறை முற்றோதலை நிறைவு செய்து அருளாசி வழங்கினர்கள். ஓதுவாமூர்த்திகளும், புலவர்களும் கலந்து கொண்டு திருமுறை விண்ணப்பம் செய்தனர். உள்ளூ!

அன்பர்களும் பிரமுகர்களும் பல ஊர்களிலிருந்து வந்த பொது மக்களும் செவிமடுத்துக் கேட்டுய்ந்தனர்.

ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

தருமைஆதீனம் ஸ்ரீஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலிலும் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் ஸ்ரீ மறைஞான சம்பந்தர் குருபூஜை விழா 23—8—90 வியாழக்கிழமையன்று ஆவணி உத்திரத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை சமயாசாரியார் சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன.

தருமபுரத்தில் :

தருமையில் மாலை 6-30 மணியளவில் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலில் ஓய்வு பெற்ற முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம்.ஏ., அவர்கள் "திருக்கயிலாயபரம்பரை" என்ற தலைப்பிலும், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பி. எட்., அவர்கள் மறைஞானசம்பந்தர் "அருள் வரலாறு" என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

சிதம்பரத்தில் :

சிதம்பரம்ஸ்ரீசபாநாயகர்திருக்கோயிலில்,ஸ்ரீசந்தானாசாரியர் சந்நிதியில் சொற்பொழிவு நிகழ்ச்சி, திருமுறைக் கலாநிதி திரு. எம். கனகசபை பிள்ளை திருமுறைப்பண்ணிசையுடன் தொடங்கி நிகழ்வுற்றது.

தலைவர் சிவஸ்ரீ T. துரைசாமிரத்தின தீக்ஷிதர் அவர்கள் தலைமையுரை ஆற்ற, தலைமை ஆசிரியர் சைவசித்தாந்தப்புலவர் திரு. ஜி. இராகவன், எம்.ஏ., பி.எட்., அவர்கள் "ஸ்ரீமறைஞான சம்பந்தர் அருள் வரலாறு" என்ற தலைப்பில் உரையாற்றினர்.

தருமை ஆதீனத்தில் ஆவணிமூலப் பெருவிழா

தருமை ஆதீனத்தில் 28, 29, 30—8—90 ஆகியமுன்று நாட்களிலும் ஆவணிமூலப் பெருவிழாவும் ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றன. விழா நாட்களில் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்களின் ஆன்மார்த்த மூர்த்தியாக விளங்கும் ஸ்ரீ சொக்கநாதபெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பான முறையில் நடைபெற்றன.

30—8—90 வியாழக்கிழமை ஆவணி மூலத்திருநாளன்று காலை ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ வழிபாடு நிகழ்வுற்றது. விழா மலராக சிவஞானபோதம் வெளியிடப்பெற்றது.

இந்நாளில் ஆண்டு தோறும் அறிஞர் ஒருவருக்குச் சிறப்பு பட்டம் அளித்து ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியருள்வார்கள். இதுவரை 39 அறிஞர்கள் பட்டம் பெற்றுள்ளார்கள். இம்முறையில் ஆவணிமூலநாளன்று மாலை வழிபாட்டின்போது சென்னை, பச்சையப்பன்கல்லூரி முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர்,பேராசிரியர்,திரு.அ.மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம். லிட்., அவர்களுக்குச் "செந்தமிழ்க் கலாநிதி" என்ற பட்டம் அளித்துப் பொன்னாடை போர்த்தி ஆசி வழங்கினார்கள்.

ஆவணிமூல விழாவை ஒட்டி மூன்று நாட்கள் தருமை ஆதீனக் கல்விநிலையங்களின் ஆண்டுவிழாதிருநெறியதெய்வத் தமிழ் மன்றத்தில் நிகழ்வுற்றது.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞான சம்பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு விழா 28—8—90 செவ்வாய்க்கிழமையன்று மாலை 3 மணியளவில் சேக்கிழார் திருநாளாக நடைபெற்றது. திருமதி. மீரா கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., திரு. சாமி. கிருஷ்ணமூர்த்தி, எம். ஏ., திரு. இரா. மருதநாயகம் ஆகியோர் உரையாற்றினர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி மாணவ மாணவியர் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தருமை ஆதீனத் தேவாரப்பாடசாலை, வேத சிவாகமப் பாடசாலை ஆண்டுவிழா 29—8—90 புதனன்று மாலை 3-00 மணி அளவில் கச்சியப்பர் திருநாளாக நிகழ்வுற்றது. டாக்டர் திருமதி. ப. நீலா, எம்.ஏ., எம்.ஃபில்., அவர்கள் "கச்சியப்பரின் கற்பனைத்திறன்" என்ற தலைப்பிலும், பகுதிநேர் விரிவுரையாளர் திரு. நா. ஞானசேகரன், எம். ஏ., எம். ஃபில்., அவர்கள் "கச்சியப்பரின் பக்திக் கனிவு" என்ற தலைப்பிலும் உரையாற்றினர். ஸ்ரீகுருஞானசம்பந்தர்உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தருமை ஆதீனம் கலைக் கல்லூரி ஆண்டுவிழா 30—8—90 வியாழனன்று மாலை 7-00 மணி அளவில் 'பரஞ்சோதியார்' திருநாளாகக் கொண்டாடப்பெற்றது. இறைவணக்கத்துக்குப் பின் ஆதீனக்கல்விநிலையங்களின் ஆண்டறிக்கைகள் படிக்கப் பெற்றன. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆசியுடன் பரிசுகள் வழங்கப்பெற்றன.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானத்தின் ஆசியுரை குருவார மௌனத்தை முன்னிட்டு முன்னரே ஒலிப்பதிவு செய்யப்பட்டு அன்று ஒலிபரப்பப்பட்டது. தருமை ஆதீனக் கலைக் கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் திரு. இரா. செல்வக்

கணபதி, எம். ஏ., பிஎச். டி., பரஞ்சோதியாரின் பக்தித்திறம் என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினர். சென்னை, டாக்டர் திரு. தெ. ஞானசுந்தரம், எம். ஏ., பிஎச். டி., அவர்கள் பட்டம் பெற்றவரைப் பாராட்டிப் பேசினர். "செந்தமிழ்க் கலாநிதி" பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம், எம். ஏ., எம். லிட்., அவர்கள் சிறப்புரையாற்றித் தம் நன்றிப் பெருக்கைத் தெரிவித்துக்கொண்டார். இவ்விழாவிற்கு அறிஞர் பெரு மக்களும் மயிலாடுதுறை அன்பர்களும் வந்திருந்தனர். இறை வழிபாட்டுடன் விழா இனிது நிறைவுற்றது.

குமரக்கட்டளை குடமுழுக்கு

திருக்கயிலாயபரம்பரைத் தருமபுர ஆதீனத்தின் அருளாட்சியில் சிறந்திலங்கும் இருபத்தேழு தேவஸ்தானங்களில் ஒன்று மயிலாடுதுறை, குமரக்கட்டளை ஸ்ரீவள்ளி தேவசேனை உடனுறை ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருக்கோயில். இத்திருக்கோயிலின் ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 2—9—90 ஞாயிறு காலை 8-20 மணிக்கு மிகச் சிறப்பாக நடந்தேறியது.

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான கௌரீ மாயூரம் ஸ்ரீமயூரநாதசுவாமி திருக்கோயில், சுவாமி கருவறையின் மேல்பால் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி, தெய்வானை உடனுறை குமரப்பெருமான், விநாயகர், அகத்தீசுவரர், மீனுட்சி சுந்தரேசுவரர் ஆலயவிமானங்களுக்கும் அம்பாள் கோயிலில் விளங்கும் முருகப்பெருமான் விமானமும், குமரக்கட்டளை உற்சவ மண்டபமும், மயூரநாதர் நற்பணி மன்றம் பேரன்பர்களின் உபயமாக ரூபாய் 40, 000 பொருட் செலவில் மிகச்சிறப்பாகத் திருப்பணி செய்யப் பெற்றன. இதர திருப்பணிகள் குமரக்கட்டளைச் சார்பில் செய்யப்பெற்றன.

தருமை ஆதீனம் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் மிகச்சிறப்பாக அழகிய வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பெற்றிருந்த யாக சாலையில் 30—8—90 வியாழன் மாலை முறையாக ஆறுகால யாகபூஜைகள் சிறப்பாக நடந்தேறியன. ஒவ்வொரு கால பூஜைகளும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் முன்னிலையில் சிறப்பாக நடந்தேறின். யாகசாலைப் பூஜைகளை திருநள்ளாறு ஸ்ரீதர்பாரண்யேசுவரசுவாமி தேவஸ்தானம் கட்டளைவிசாரணை வித்துவான் தவத்திரு. சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளும், திருச்சிராப்பள்ளி ஸ்ரீ மௌன மடம் கட்டளை விசாரணை வித்துவான் தவத்திரு. மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளும் முன்னின்று நடத்தினர்.

ஸ்ரீ மயூரநாதசுவாமி திருக்கோயில் குடமுழுக்கோடு ஒட்டி அதே வேளையில் மேற்குறித்த குமரக்கட்டளை தேவஸ்தான விமானங்கள், மூர்த்திகள், அறுபத்துமூவர் கோட்டம்முதலிய வற்றிற்குத் தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் 23 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் குடமுழுக்குவிழா மிகச்சிறப்பாக நடந்தேறியது. அன்று காலை 8-30க்கு மேல் 9-00க்குள் மூலஸ்தான மூர்த்திகள் மகாகும்பாபிஷேகமும், மாலை 6-00 மணிக்கு மகாபிஷேகமும், இரவு ஸ்ரீ குமரப்பெருமானுக்குத் திருக்கல்யாணமும் வண்ண விளக்குகளுடன் வெள்ளிரதத்தில் குமரப்பெருமான் திருவீதி யுலாவும் சிறப்பாக நடந்தேறின. தருமைஆதீனம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் 31--8—90 முதல் 2—9—90 வரை வேத, ஆகம, இதிகாச, இலக்கியங்களில் முருகப்பெருமான்பற்றிய ஆய்வரங்கமும், சொற்பொழிவுகளும் நடைபெற்றன. வேதபாராயணம், திருமுறைப்பாராயணம் முதலியனவும் நிகழ்ந்தேறின.

தருமைக் குருமணிகள் வழிபாடாற்றி அன்பர்களுக்கு அருளாசி நல்கி, மகாபிரசாதங்கள் வழங்கியருளினர்கள். பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் குமரப்பெருமானைத் தரிசித்து இம்மை மறுமைப் பயன்பெற்றனர்.

கருத்தரங்கம் :

தருமை ஆதீனம் மயிலாடுதுறை குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிர மணியசுவாமிதேவஸ்தானம் திருக்குடமுழுக்குப்பெருவிழாவை முன்னிட்டு, நிகழும் பிரமோதூத ஆண்டு ஆவணித்திங்கள் 15 ஆம் நாள் முதல் 17 ஆம் நாள் முடிய (31—8-90 முதல் 2 9-90 முடிய) அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் குமரக்கட்டளை ஸ்ரீ குமரவிலாஸ் மண்டபத்தில் முற்பகல் 10.00 மணிமுதல் 1-00மணிவரையிலும் பிற்பகல் 2-30 மணி முதல் 5-00 மணிவரையிலும் கருத்தரங்கும் மாலை 6-00 மணி முதல் சொற்பொழிவும் நிகழ்ந்தன.

31 8-90 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணியளவில் கருத்தரங்கு தொடங்கியது. முதல் அமர்வில் தருமை ஆதீனத் தேவாரப் பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. ஆர். வேலாயுத ஓதுவாமூர்த்தி இறை வணக்கம் பாட, ஆராய்ச்சி நிறுவனத்தின் கௌரவ இயக்குநர் சைவசித்தாந்தக் கலாநிதி திரு. தி. ந. இராமச்சந்திரன் வரவேற்புரை ஆற்ற, நியாய பீமாம்ஸா சிரோமணி திருவெண்காடு திரு.டி.கே. முத்துசாமி சாஸ்திரிகள். " வேதங்களில் அறுமுகச் செவ்வேள் " என்ற தலைப்பிலும்

தருமை ஆதீன வேத சிவாகமப் பாடசாலை தலைமை ஆசிரியர் சிவஸ்ரீ ஏ. வி. சுவாமிநாத சிவாசாரியார் "ஆகமங்களில் அறுமுகச் செவ்வேள்" என்ற தலைப்பிலும் கட்டுரைபடித்தனர். பிற்பகல் இரண்டாம் அமர்வில் கௌரவ இயக்குநர் இணைப்பாளராக இருக்க, பாண்டிச்சேரி இந்தியப்பண்பாட்டு ஆய்வுக்கழகம் திரு. ஆர் சுப்பிரமணியம் "புராண இதிகாசங் களில் அறுமுகச் செவ்வேள்" என்ற தலைப்பிலும் அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனப் பேராசிரியர் டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி "சங்கஇலக்கியங்களில் அறுமுகச்செவ்வேள்" என்ற தலைப்பிலும் கட்டுரை படித்தனர்.

மாலையில் நடைபெற்ற சொற்பொழிவில் மயிலாடுதுறை வழக்கறிஞர் திரு. இரா. சிவபுண்ணியம் தொடக்க உரையாற்ற, தருமைஆதீனக் கலைக்கல்லூரிநூலகர் திரு.இரா.செல்வநாயகம் "செல்வமுத்துக்குமரசாமி திருவருட்பா" என்ற தலைப்பிலும் நகராட்சி மேல்நிலைப்பள்ளி உதவித் தலைமை ஆசிரியர் வித்துவான் திரு.சா.முத்துக்கிருட்டிணன் "முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ் என்ற தலைப்பிலும் பேசினர்கள்.

1—9 - 90சனிக்கிழமை காலையில் நடைபெற்றகருத்தரங்கில் தருமை ஆதீனக் கலைக் கல்லூரி முன்னுள் முதல்வர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் இணைப்பாளர் ஆக இருக்க, மன்னன்பந்தல் அ. வ. அ. கல்லூரிப் பேராசிரியர் டாக்டர் திரு.சொ.சிங்காரவேலன் "தேவாரத் திருமுறைகளில்அறுமுகச் செவ்வேள்" என்ற தலைப்பிலும் அ.சை.சி.ஆ. நிறுவனகௌரவ இயக்குநர் திரு. தி. ந. இராமச்சந்திரன் "8 முதல் 12 திருமுறை களில் அறுமுகச் செவ்வேள்" என்ற தலைப்பில் கட்டுரை படித்தனர். பிற்பகலில் நடைபெற்றகருத்தரங்கில் டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன் இணைப்பாளராக இருக்க, டாக்டர் திரு. கு.சுந்தரமூர்த்தி "மெய்கண்ட நூல்களில்அறுமுகச்செவ்வேள்" என்ற தலைப்பிலும் டாக்டர் திருமதி ப. நீலா "திருப்புகழில் அறுமுகச் செவ்வேள்" என்றதலைப்பிலும் கட்டுரை படித்தனர். மாலை 6 மணி அளவில் டாக்டர் திரு. கு. சுவாமிநாதன் தொடக்கவுரையாற்ற வித்துவான் திரு. வி.சா. குருசாமிதேசிகர் "கதிர்காம வேலவர் திருவருட்பா" என்ற தலைப்பிலும் ஆசிரியர் திரு.தெ.இராஜாமணி "கந்தர்கலிவெண்பா" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்.

2-9-90 ஞாயிறன்று மாலை 6 மணியளவில் திரு. இரா. இராமலிங்கம் தொடக்கவுரையாற்ற, டாக்டர் திருமதி ப. நீலா, டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, திரு. இரா. மருதநாயகம் ஆகியோர் முறையே 'கந்தபுராணச்சுருக்கம்,' 'கந்தர்அனுபூதி,' 'கந்தரலங்காரம்' என்ற தலைப்புகளில் சொற்பொழிவாற்றினர். அ. சை. சி. ஆ. நிறுவனப் பதிவாளர் திரு. எஸ். பாஸ்கரன் நன்றியுரை கூற இறை வாழ்த்துடன் முடிந்தது.

எதிர்காலம்

ஜோதிஷம்
திரு. A. இராசமாணிக்கம்
ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(பிரமோதூதஸ்ரீ புரட்டாசிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—9—1990 முதல் 17—10—1990 முடிய)

பிரமோதூதஸ்ரீ புரட்டாசிமீ 1உ சோமவாரம் மக நக்ஷத்திரம் பத்திரைகரணம் கூடிய காலத்தில் சூரியன் உதயம் முதல் 14 நாழிகை 26 விநாடிக்கு விருச்சிக லக்கினத்தில் ஸ்ரீ உலக ரட்சகரான சூரியபகவான் சிம்ம ராசியினின்றும் கன்னியா ராசி சங்கிரமணமாக புரட்டாசிமாதப் பிரவேசம் செய்தருளுகின்றார் மேதை என்கிற புத பகவான் புரட்டாசி மாதம் 12 ஆம் தேதி காலை மணி 8 நிமிஷம் 23 க்கு தனது உச்ச ஸ்தானமான கன்னியாராசியில் பிரவேசம் செய்து, ஜெகத்தில் உள்ள எல்லா மாந்தர்களும் சரஸ்வதித்துவ மேம்பாட்டில் திகழும் பொருட்டு புலர்ந்து அருளுகின்றார். அதனால் உலகில் மாணக்கர்கள் ஆசான்கள் மூலம் நூல் அறிவை எளிதில் கற்றுணர்ந்து சகல கலைகளிலும் வல்லவர்களாகி பகுத்தறிவு மேம்பாட்டில் திகழ்வர். விஞ்ஞானிகளால் புதுமை கண்டு பிடிப்புகள் ஏற்பட்டு மாந்தர்களின் உபயோகத்துக்கு பரவலாக வரும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பரமாசாரிய சுவாமிகளாக வந்து நித்தியம் பரமேஸ்வரனை பூசிக்கின்ற பாக்கியத்தில் திகழ்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள், ஜெகத்குருமகான்கள் உலகத்துக்கு நல்வழிகாட்டி அருள்வார்கள். செங்கோல் ஆட்சி ஓங்க ஈஸ்வரனை பிரார்த்தித்துபக்தகோடிகள், இராஜபிரமுகர்களுக்கு மகாபிரசாதம் வழங்கியும் ஆசீர்வாதம்செய்தும் அருள்வார்கள். இளைய சமுதாயத்தினர் சகலகலைகளும் கற்றுணரவும், வேதம் சாஸ்திரம் பயிலவும், பாடசாலை கலாசாலைகள் பல நிறுவி அனுக்கிரகிப்பார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் ஐதீக வழியில் நித்தியகால பூசனைகள், சிவசக்திகளுக்கு ஆராதனைகள், இலட்ச கோடி அருச்சனைகள் நடந்து இறையருளில் உலகில் அமைதி ஏற்படும். மக்கள் சுபிட்சமாக வாழ்வர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம்அதிகம் வந்துகொண்டிருக்கும். பூமிஅபிவிருத்தியில் செலவினமும் ஆகும். வித்துவத்துவம் கலைத்துறையில் விசேஷ

பலன் தரும். எல்லாக் காரியங்களும் மதிநுட்பத்தால் ஜெய பிராப்தியாக நடந்தேறும். குரு கேது சேர்க்கை ஞானசிந்தை சாஸ்திர பரிச்சயம் அளிக்கும். நவீன சாதனம் பொருந்திய வாகனம் தரும். புத்திரர்களின் கல்வி கலை உத்தியோகம் மேன்மை ஸ்திதியாகும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும் சனி, ஞாயிறு சுபம்.

2. ரிஷபம்:- கார்த்திகை $\frac{3}{4}$ – உரோகிணி – மிருகசீரிஷம் $\frac{1}{2}$

ரிஷப ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் நல்லன ஏற்பட்டு வரும். வீடு வாகன பிராப்தி யில் நவீன சாதனம் பொருந்தும். புத்திரர்களின் கல்வி கலை களில் உயர்வும் தொழில் உத்தியோகத்தில் அரசாங்க நன்மை களும் ஏற்படச் செய்யும் குறிப்பிட்ட எல்லாக் காரியங்களும் புத்தி மேம்பாட்டில் சிறப்பாக நடந்தேறும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். திங்கள், செவ்வாய் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் $\frac{1}{2}$ – திருவாதிரை – புனர்பூசம் $\frac{3}{4}$

மிதுனராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் பெருமதிப்பில் வரும். பூமியில் இயந்திரங்களில்பணம்முடங்கும். அரசு விகிதம் வந்து மகிழ்ச்சியளிக்கும். நல்ல பூஷணம் அளிக்கும். வாகனம் வீடு வசதிகளில் நல்லன ஏற்படும். புத்திரர் பௌத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். தாம்பத்திய வாழ்வில் ஆசார அனுஷ்டான நியம விதியுடன் தானதர்மம் செய்யும். புதன், வியாழன் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் $\frac{1}{4}$ – பூசம் – ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் வெகுவாக வரும். பூமியில் எந்திரங்களில் அபிவிருத்திபலன் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். நல்லஇரத்தின பூஷணம் தரும். நல்லவர் வருகை பிரபலஸ்தர் நேசம் நல்ல வியாபகம் உண்டு பண்ணும். வாக்குபலன் உயர்வில் திகழும். எல்லாக்காரியங்களையும் புத்திமேம்பாட்டில் வெற்றிகரமாக நடத்தச் செய்யும் இலாப பிராப்திமிகும். வெள்ளி, சனி சுபம்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் $\frac{1}{4}$

சிம்ம ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கண்யஸ்திதிக்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். தர்ம விஷயம் சுப விசேஷங்களில் செலவினையும் செய்யும். வித்து வத்துவம் கலைத்துறையில் நன்மதிப்பும் மதிநுட்ப செயல்களில்

நல்லனஏற்படுதலும் ஆகும். சுயநலமின்றிபொது நலம்பேணும் எல்லாக் காரியங்களையும் கெடியான தோரணையில் வெற்றிகர மாக நடத்தி வரும். வயிற்றில் வாயு உபத்திரவம் வந்து குண மாகும். தார சௌக்கியம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். ஞாயிறு, திங்கள் சுபம்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பணவருமானம் பெருமதிப்பில் வரும். டாம்பீக நாகரிகத்தில் நல்ல செலவினமும் செய்யும். வித்துவத்துவம் கலைத்துறையில் உத்தியோகத்தில் அரசாங்க நன்மைகள் ஏற்பட்டு வரச் செய்யும் அக்டோபர் 16வ யிலிருந்து விசேஷமான நற்காரியங் களில் ஈடுபாடும் நன்மதிப்பு ஏற்படுதலும் ஆகும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். செவ்வாய், புதன் சுபம்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வந்து நிறையும். மாத பின்பகுதியில் நல்லவித செலவினமும் செய்யும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் அரசு நிபந்தனையில் விளம்பரம் ஆகியவற்றில் பொருள் முடங்கச்செய்யும். திட்டமிட்டபடி மனோபலத்தில் கௌரவ போக்கிலேயே எல்லாக்காரியங்களையும் நடத்தும். ஓர் விபத்து நேர்ந்து தப்புதல்ஆகும். ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு அர்ச்சனை செய்ய நலம். அடிக்கடி வெளியூர் பயணம் சென்று வருதல், தெய்வதரிசனம், நல்லவர் சந்திப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். வியாழன், வெள்ளி சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் அதிகம் தரும். மூன்று வகை இலாப பிராப்தியை உண்டுபண்ணும். வித்துவத்துவம்கலைத்துறையில்அரசாங்கத்தி லிருந்து நற்செய்தி வரும். உத்தியோகத்தில் பதவி உயர்வு வரச்செய்யும். மாணக்கர்களுக்கு நல்லுபதேசம் அல்லது உதவி பணியாளர்களை நெறிவழிபடுத்தல் அமைதிக்கு மேலாண்மை நிர்வகித்தல் ஆகும். ஓர் ஆண்மகவு ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சற்று பிணக்கு வரும். பின் சுமுக நிலையாகும். சனி, ஞாயிறு சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திரம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் கௌரவ ஸ்திதியில் வரவாகிக் கொண்டிருக்கும். அக்டோபர் 15 இல் எல்லா வகையிலும் பிரயோஜன சித்தியாகும். வழக்கு களில் ஜெயபிராப்தியாகும். உடல் நலம் நன்ருகும். பசு வாகனம் இவற்றின் பிராப்தியை யளிக்கும். சில விஷயங்களில் பற்றுகுறையும் ஞானசிந்தையை ஏற்படுத்தும். எல்லாக்காரியங் களையும், அரசகண்யத்தில் சிறப்பாக நடத்தச் செய்யும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். அக்டோபர் 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் சுப பலனுக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். அவசிய செலவினங்களும் ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறையில் விசேஷ நன்மைகளை ஏற்படுத்தும். அரசாங்கத் தொடர்புகளில் நல்லன ஏற்படும். உத்தியோக உயர்வளிக்கும். நல்லவர் பிரபலஸ்தர் சந்திப்பு, குருமார்களிடம் ஆசி பெறுதல் ஆகும். திவ்விய க்ஷேத்திரம் சென்று வருதல் தெய்வ தரிசனம் அமைதி தரும். எல்லாக் காரியங்களையும் அரச கண்யத்தில் சிறப்பாக நடத்தும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். அக்டோபர் 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். அதற்கேற்ப செலவினமும் ஏற்பட்டுக் கொண்டிருக்கும். உற்றவரில் ஒருவர் அல்லது நெருங்கிய தொடர்புடைய அன்பர் சிறிது காலம் காரணமின்றி விலகிக்கொள்வர். அரசு அனுகூலங்கள் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். புத்திரர்களின் கல்வி கலையில் உயர்வளிக்கும். அக்டோபர் 16, 17 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிரசித்தம் தரும். நல்லவர் பிரபலஸ்தர்களால் ஸ்லாகித்தல் நன்மை உண்டாகுதல் ஆகும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் இருந்துவரும். புத்திரர் பௌத்திரர்களுக்கு சுபம் தரும். மனைவிக்கு சிரோபாதைநலிவு வந்துஉடன் குணமாகும். எல்லா பொது நலப்பணியிலும் நற்பெயர் உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபம்.

அனைத்துலக சைவ சித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவ சமயக்கல்வி–V
பாடம் – 4.

நீதிநெறி விளக்கம்

டாக்டர் திரு. மு. சிவச்ச , எம் ஏ., பி.எச்.டி.
தருமபுரம்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாக விளங்குவது திருக்குறள். எல்லா நூல்களிலும் நல்லனவற்றை எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக்கூறுவது இந்நூலுக்குள்ளபெருமை. குறள்வெண்பா யாப்பில் இப்பேருலகத்திற்கு வழிகாட்டும் உயர்ந்த கருத்துக்களை விளக்கும் அரிய தமிழ்நூல். இந்நூலின் வழி அறக்கருத்துக்களைக் கூற எழுந்த மற்றொரு நூல் நீதிநெறி விளக்கம் ஆகும். இதனை அருளியவர் குமரகுருபரர் ஆவர்.

குமரகுருபரர் :

இவர்செந்திலாண்டவன் திருவருளால் பேசும் ஆற்றலையும், கவிபாடும் திறனையும் ஒருங்கு பெற்றவர். மதுரை மீனாட்சித் தாயின் திருக்கரங்களால் முத்துமாலைசூட்டப்பெற்றவர். தருமை ஆதீனத்தின் நான்காவது குருமூர்த்திகளிடம் சிவஞான உபதேசம் பெற்றவர். குருநாதரின் ஆணைவழி காசி சென்று அங்கிருந்த மன்னனின் துணையுடன் 'ஸ்ரீ குமாரசாமி மடம்' என்னும் திருமடத்தை நிறுவியவர். தமிழ்த்தாய்க்கு அழகு சேர்க்கும் வண்ணம் பதினறு தமிழ் நூல்களை அருளியவர். தமிழின்மீது தீராக்காதல் உடையவர். தமிழ் இலக்கணப் புலமையும், இலக்கியப் புலமையும் பெற்றுயர்ந்த தவ சீலர். பிள்ளைத்தமிழ் நூல்கள் வரிசையில் இவரருளிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழும், முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழும் நினைந்து தனித்து வைத்துப் போற்றத்தக்கன. திருவருளும், குருவருளும் துணைநிற்க, தென்னாட்டில் மட்டுமின்றி வடநாட்டிலும் சைவத்தைப் பரப்பிய அருளாளர் இவர் என்பது குறிப்பிடத் தக்கது. இவரின் காலம் :– கி. பி. 1625 – 1688.

இவர் மதுரையில் தங்கியிருந்த காலத்தில், அந்நகரை ஆண்டு வந்த திருமலை நாயக்கருக்கு, ஒரு சந்தர்ப்பத்தில்

திருக்குறளைப் பற்றி அறிவுறுத்தி, 'வகுத்தான்வகுத்த வகை யல்லால்' என்று தொடங்கும் குறட்பாவின் கருத்துக்களை விளக்கினர் என்றும், அவற்றைக் கேட்ட மன்னன், இத்தகைய திருக்குறளை ஒப்ப ஒரு நீதி நூல் ஆக்கித்தர வேண்டும் என்று இவரைக் கேட்டுக் கொண்டான் என்றும், அதனால், இவர் நீதிநெறிவிளக்கம் என்னும் இந்நூலை அருளினர் என்றும் கூறுவர்.

நீதிநெறிவிளக்கம் – பொருள் பகுப்பு :

இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்தது. கடவுள் வாழ்த்து உட்பட 102 வெண்பாக்கள் இதன்கண் உள்ளன. கடவுள் வாழ்த்து, கல்வியின் பயனும் சிறப்பும், கல்வியின்பம், கல்விச் செல்வம், உய்த்துணர்வும் சொல்வன்மையும், இருந்தும் பயனில்லன, புலவர் பெருமை, அவையஞ்சுக் கல்வி, கற்றன மறவாமை, நல்கூர்ந்தார் கல்விநலம், கைத்துடைமை, புலவர் வறுமை, கல்வியழகே அழகு, கல்விச்செருக்கு, கற்கை அவா, எல்லார்க்கும் நன்றும்பணிதல், பெரியோர் பணிவு, தற்புகழ்ச்சி யால் வரும் கேடு, தற்புகழ்ச்சியின் இகழ்ச்சி, பெருங்சுட்டு பெறும்வழி, கற்றபடிநிற்றல், மெய்ந்நூல் அறிவை விலைப் படுத்துதல், கல்லாதார்அடக்கமின்மை, கல்விநலம் அறிவுடை யோர்க்கே, கல்லார்க்கு அறம் உரைத்தல், மேன்மக்கள் பெருமை, இறைமாட்சி, ஆளும் திரு, இறைகோடல், கொடுங் கோன்மை, அரசர்ச்செல்வ மயக்கம், செங்கோன்மை, அரசன் முதறிவு, கீழ்மக்கள்இயல்பு, கெடுவதுகாட்டும்குறி,பெரியாரைப் பிழையாமை, ஈகை, செழுங்கிளைத்தாங்குதல், நன்கு மதிப்பு, புகழுடம்பு பெறும்வழி, மானம் இழத்தல், சாவஞ்சாமை, மெய்ப்பயன் கொண்டார், மன்பதை, அமைச்சு, செவ்வித் தெரிந்துரைத்தல், இறைமாண்டார் வெகுளி, மன்னர் புறங் கடைக்காத்தல், உலையாமுயற்சி, அறிவையறிந்த முயற்சி, முயற்சியுடைமை, ஆள்வினைத்திறன், கருமமே கண்ணயினர், சிறுபகை ஓம்பல், உட்பகை ஓம்பல், உட்பகை கலைதல், வஞ்சநட்பு, மனநலம், சொற்றிறம், நல்லாறு, நல்லோர்இயல்பு, கூடாத செல்வம், வஞ்சித்துக் கொண்ட உடைமை, பேரவா, அறத்தாற்றின் பொருளீட்டல், செல்வ வகை, ஈயாதான் செல்வம், இன்சொல் சிறப்பு, சொல்வன்மைப்பயன், சிறு முயற்சிபெரும்பயன், நாகரிகர் அல்லாதார், அடக்கம் இல்லாதார், பிறர்பழிகூறல், தெய்வ தண்டனை, தீயவர் ஆக்கம், பழிநாணுவோர், பிறர்மனை நயத்தல், நன்னலஇன்பம், காமம் கதுவப்பட்டார், தீயவிலங்குஅனையர், நன்மக்கட்பேறு,கற்பின் மகளிர், துறவு என்னும் பொருள்களில் இந்நூலின் பாடல்கள்

அமைந்துள்ளன. இந்நூலில், முதல் 81 செய்திகளை முதல் 81 பாடல்களிலும் "சற்பின் மகளிர்" என்பது 82, 83, 84 ஆம் பாடல்களிலும் "துறவு" என்பது 85 முதல் 102 வரை உள்ள பாடல்களிலும் முறையே விளக்கப் பெற்றுள்ளன.

ஒன்றில் மூன்று :

குமரகுருபரர், கடவுள்வாழ்த்துப்பாடவந்தபோது, கடவுளை வணங்குங்கள் என்று கூறாமல், இளமையும் செல்வமும் உடம்பும் நிலையற்றன; ஆகவே இவற்றைவிட்டு நிலையான பேரின்பத்தைத் தரும் இறைவனை வணங்காதது ஏன் என்று கேட்கிறார். இளமையும், செல்வமும், உடம்பும், நிலையற்றன என்பதை இவருக்கு முன்னே பலரும் கூறியுள்ளனர். ஆனால் இவர் இந்நிலையாமைகளை ஒரேபொருளில் வைத்துவிளக்கியுள்ள திறன் நினைந்து நினைந்து மகிழ்த்தக்கது. இளமை நிலையாது என்பதை நீரின்கண் தோன்றுகின்ற குமிழ் போன்றது என்றும், செல்வம் நிலையாது என்பதை அந்நீரின்கண் தோன்றுகின்ற அலைகள் போன்றது என்றும், உடம்பு நிலையாது என்பதை, அந்நீரில் எழுதும் எழுத்துப் போன்றதென்றும் கூறியுள்ளார். குமிழ் உருண்டு திரண்டிருந்து பார்ப்பதற்கு அழகாகத் தோன்றினும் அதன் தோற்றம் நிலையுடையது இல்லை என்பது போல, இளமை, அழகுற விளங்கினும் அது அழியும் தரத்தது என்கிறார். அலைகள் தோன்றும்போது பெரியனவாகத் தோன்றி, ஆரவாரம் கொண்டு விளங்கி, ஆனால் கரைசாரக் கரைசாரச் சுருங்கிச் சுவடு இன்றிப் போவதுபோல, செல்வம் சேரும்போது பெரிதாக அமைந்து பின்னே காலப்போக்கில், கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து அழிந்தே போகும் என்கிறார். நீரில் எழுதுகிறஎழுத்து உடனேயே அழிந்துகொண்டு வருவதுபோல உடம்பும், நாளுக்குநாள் தேய்ந்து, வலிகுன்றி, மறைந்து போகும் என்கிறார். எழுத எழுத அழிதல், நீரின் எழுத்திற்கு இலக்கணம்; வளரவளரத் தேய்தல் உடம்பின் இயல்பிற்கு இலக்கணம். இளமை முதற்கண் தோன்றுதலும், செல்வம் பின்னே சேர்தலும், வயதுமுப்பில் உடல் அழிதலும், ஆகிய காலமுறைப்படி இந்நிலையாமைகளைக் கூறியுள்ளார் எனலாம். குமிழ், அலைகள், நீரில் எழுத்து என மூன்றையும் வைத்துப் பார்க்கும்போது, இது கடலை வைத்து விளக்கியதாகக் கொள்ள லாம். திருவள்ளுவர் பிறவியைக்கடல் என்று உருவகம் செய்தார். இவர் அக்கடல் நீரை உவமையாக்கி மூன்று நிலையாமைகளை விளக்கியுள்ளார்.

நீரிற் குமிழி யிளமை; நிறைசெல்வம்
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று.

என்னும் பாடல் மேற்காணும் கருத்துக்களை விளக்குகிறது.

அமைதிகாண அரியவழி :

திருவள்ளுவர், செல்வத்தைச் சேர்க்க வேண்டும் என்னும் கருத்தினைப் "பொருள்செயல் வகை" என்னும் அதிகாரத்தின் மூலமும், அப்பொருளைத்தான் நல்லவகையில் பயன்கொள்ளல் வேண்டுமென்பதை, "நன்றியில் செல்வம்" என்னும் அதிகாரத்தின் மூலமும், அப்பொருளை உற்றார், உறவினருக்குக் கொடுத்து உதவுதல் வேண்டும் என்பதை, "ஒப்புரவறிதல்" என்னும் அதிகாரத்தின் மூலமும், அச்செல்வத்தை வறியவர்களாகிய அயலார்க்கும்கொடுத்து இன்புறல் வேண்டும்என்னும் கருத்தினை, "ஈகை" என்னும் அதிகாரத்திலும் வைத்து விளக்குகிறார். இவையனைத்தும் பொருளுடையார்க்கு வள்ளுவர் கூறும் அறிவுரைகளாகும். மேலும் "இரவு" என்னும் அதிகாரத்தின் மூலம் பொருளில்லாதார், பொருள் உள்ளவரிடம் சென்று யாசகம் கேட்டுப் பயன்கொள்ளல் வேண்டுமென்கிறார். "இரவு அச்சம்" என்னும் அதிகாரத்தின் மூலம் யாசகம் கேட்பதும் ஒருவாற்றான் இழிவானதே என்று அறிவுறுத்துகிறார். இங்ஙனம் பொருளுடையார் செய்யவேண்டிய செயல்களையும், பொருள் அற்றார் மேற்கொள்ள வேண்டிய முறைகளையும், வகுத்துக் கூறிய வள்ளுவர், ஓரளவு பொருள் பெற்றவர் அதுகொண்டு மன ஆறுதல் பெறவேண்டும் என்பது குறித்து எங்கும் கூறவில்லை. பொருளாதார நிலையில் உயர்ந்தோரும், தாழ்ந்தோரும் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் அறம் சொன்னர். நடுத்தரப் பிரிவினர் பற்றித் தெளிவான உளவியல் ரீதியான அறவுரை கூறியவர் குமரகுருபரரே ஆவர்.

ஓரளவு பொருள்வளம் இருக்கிறதா? அப்படியானால் இந்த அளவாவது இறைவன் நமக்குச் செல்வம் அளித்துள்ளானே என்று மன நிம்மதி கொள்ளுங்கள். ஏனெனில் இதுவும் இன்றி வறுமையின் எல்லைக்கே சென்று வாழ்ந்து வருவோர் பலர் உள்ளனர். நமக்குப் புத்தாடையும், பட்டாடையும் இல்லாமல் போகலாம். ஆனால் உடுத்திய ஆடைக்கு மாற்று ஆடையாவது உள்ளது. மானம் காப்பதற்கு ஓர் ஆடை கூடச் சரியாக இல்லாதவர் இவ்வுலகில் ஏராளம். நமக்குப் பால் சோறும், இனிய

உணவும் அமையாமல் இருக்கலாம்: ஆனால் வயிரார உண்ப தற்கு வழி உள்ளது; அதுகூட இல்லாமல் துடிக்கும் பிள்ளை முகத்தைப் பார்த்து வருந்தும் பெற்றோர்கள் பலர் உள்ளனர். எனவே அதுவேண்டும், இதுவேண்டும் என்று அலைந்து, இருக்கும் பொருளால் கிடைக்கும் இன்பத்தையும் இழந்து போகாதீர்கள் என்று அறிவுறுத்துகின்றார்.

இங்ஙனம் பொருள் நிலையில் மன அமைதி பெறுவதற்குத் தம்மினும் தாழ்ந்தவரைப் பாருங்கள் என்று அறிவுறுத்திய குமரகுருபரர், கல்வி நிலையில் தம்மினும் கற்றாரைப் பார்த்து மேலும் மேலும் கற்க வேண்டும் என்னும் உந்துதலைப் பெறுங்கள் என்கிறார்.

> தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
> அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
> கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
> எற்றே யிவர்க்குநா மென்று.

என்பது அப்பாடல். இப்பாடலின் பொருளைக்கண்ட சிலர் பொருளாதார நிலையில், போதும் என்ற மனத்தோடு இருந்து விட்டால் மென்மேலும் வளர்வது எப்படிஎன்று கேட்கின்றனர். மென்மேலும் உழைத்து நல்லவழியில் பொருளீட்ட முனை வோரை இப்பாடல் தடை செய்யவில்லை; ஆனால் இருக்கும் பொருளை மறந்து பொருளுடையாரைக் கண்டு மனம் புழுங்கி பணம்பணம் என்றுஅலைந்து துன்புறுவோரைத்திருத்துவதற்கே இப்பாடல் துணை செய்கிறது.

உவமை நலன் :

குமரகுருபரர் இந்நூலில் சிறந்த உவமைகளைக் கையாளு கிறார். தீயசெயல் செய்வார்க்கு ஆக்கம் பெருகிக் கொண்டே வருகிறதே என்று எண்ணி வருந்துவோரிடம் ஆசிரியர், ஓர் உவமையினைக் கூறி அதுபோன்றது இது என்கிறார். காட்டுப் பசுவானது தான் கொல்ல விரும்பும் விலங்கினை முதலில் தன் நாவினால் நக்கிக் கொடுத்துக் கொஞ்சம் கொஞ்சமாக அவ் விலங்கிற்கு இன்பத்தை ஊட்டிப்பின்னர் கொன்றுவிடும். அது போன்று தீயசெயல் செய்வார்க்குச் செல்வம் பெருகி வருதலும் முதலில் இன்பம் தருவது போல இருந்தாலும், அது முடிவில் பெரும் துன்பத்தையே தரும் என்பது உறுதி. இதனை,

தீய செயற்செய்வர் ஆக்கம் பெருகினும்
தீயன தீயனவே வேறல்ல – தீயன
நல்லன ஆகாவா; நாவின் புறநக்கிக்
கொல்லுங் கவயமாப் போல்.

என்னும் பாடல் விளக்குகிறது.

இவ்வுலக வாழ்வில் செவிக்கு இனிமை தரும் முறையில் எவர் பேசுகிருரோ அவரே தமக்கு நன்மை செய்பவர் என்றும், கடுமையான சொற்களைப்பேசுவோர் தமக்குத் தீமை செய்பவர் என்றும் தவருகக்கருதிக் கொள்கின்றனர். இனியசொல் முன்னே இன்பம்தந்து பின்னேதுன்பம் தருவதாக அமையலாம். கடுஞ்சொல் முன்னே துன்பம் தருவதுபோன்றிருந்து பின்னே நிலைத்த இன்பத்தைத் தருவது ஆகலாம். இதனை ஊன்றி உணர்ந்து கொள்ளல் வேண்டும் என்கிருர் குமரகுருபரர். இவற்றை விளக்குவதற்கு இரண்டு பொருள்களை எடுத்துக் கொண்டார். வெங்கார உப்பு, வெப்பமுடையது ஆனாலும், அது உடல் நோயைநீக்கும். நஞ்சானதுகுளிர்ந்து இருந்தாலும், அது உடலைக்கொல்லும். முன்னே வெம்மையும், பின்னே நன்மையும் பயக்கும் உப்பனைய சொற்களைக் கூறுவோர் உறவு வேண்டுமா? முன்னேகுளுமையும், பின்னே உடல்அழிவையும் தருகின்ற நஞ்சனையஉறவு வேண்டுமா? என்பதை நாம்தான் முடிவு செய்தல் வேண்டும்.

இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னர்
கனியும் மொழியுங் கடுவே — அனல் கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினும் நோய்தீர்க்கும்; மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும்.

என்னும் பாடல் மேற்காணும் கருத்துக்களை விளக்குகின்றது. சிங்கி என்பது நஞ்சு என்னும் பொருளது.

தெய்வநம்பிக்கையும் – தண்டனையும்

தீமையை யார் செய்தாலும் அதன்பயனை அனுபவித்தே தீரவேண்டும்என்பது சமயஉண்மை. அதனைத்திருவள்ளுவரும் தெளிவாக விளக்கியுள்ளார்.

“ பிறர்க்கு இன்ன முற்பகல் செய்யின் தமக்கின்ன
பிற்பகல் தாமே வரும் ”

என்பது வள்ளுவம். குமரகுருபரர்மேலும் விளக்கம் தருபவராய் தெய்வநம்பிக்கை உடையவர் அதாவது சமயவாழ்வுடையோர் தீமைசெய்யின்கடும் தண்டனைகிடைக்கும்என்கிருர். இறைவன் ஒருவன் உளன்என்று உளமார நம்புகிறவர்கள் தீயன செய்தல்

அறவேகூடாது என்பது கருத்து. தெய்வமே இல்லை என்று கருதியிருப்போர் தீமை செய்யின், தண்டனை, அத்துணையளவு இதுபோழ்து இல்லைஎன்கிறர்.காரணம் இறைவனைவழிபடுவோர் இறைவனின் பிள்ளைகள் போன்றவர்கள். அவர்கள் தவறு செய்யின் அவர்களைக் கண்டித்தும், தண்டித்தும் திருத்த முயல்வது தந்தையின்கடனாகிறது. அப்படியானல் இறைவனே இல்லையென்போர் இறைவனின் பிள்ளைகள் இல்லையா? என்னும் கேள்வி எழும். இப்பிறவியில் இறைநம்பிக்கை அற்று இருப் பதனல் அவர்கள்போக்கில்வாழ்கிறர்கள்; பிறவிதோறும்வரும் படிப்பினையினல் அவர்கள் பக்குவமடைந்து வளரும் வரை அறியாதவர்களாக விளங்குகிறர்கள். ஆதலின், அவர்களும் பிள்ளைகள் தாம் எனினும் அவர்கள் செய்யும் செயலுக்குத் தண்டனை குறைவாகவே அமைகிறது. ஆனல் தெய்வத்தை உணர்ந்து வழிபடுவோர், எல்லாம் அறிந்தவர்கள் ஆதலின் அவர்கள் செய்யும் செயலுக்குத் தண்டனை கடுமையாகிறது.

> தெய்வம் உளதென்பார் தீயசெயப்புகின்
> தெய்வமே கண்ணின்று நின்றெறுக்கும் — தெய்வம்
> இலதென்பார்க் கில்லைத்தம் இன்புதல்வர்க் கன்றே
> பலகாலுஞ் சொல்வார் பயன்.

என்பது அக்கருத்தமைந்த பாடல்.

இடைவிடா முயற்சியும் இறையருளும் :

ஒரு மனிதன் காரியத்தைச் செய்யமுயல்கிறபோது, விதி யினல் ஏற்படும் தடங்களும், மதியினல் ஏற்படும் குறைகளும், தடைகளாக அமையும். அவற்றைப் புறம் தள்ளிக் காரியத்தை முடித்து வெற்றி கொள்ளல் வேண்டும் என்கிறர் குமரகுருபரர். விதியினல் ஏற்படுவதை இறையருளாலும், மதியின்குறைவினல் ஏற்படுவதை இடைவிடாத முயற்சியினலும் வெல்லவேண்டும் என்கிறர்.

காரியம் செய்யத்தொடங்கும்போது மெய்வருத்தம் ஏற்படு தலும், பசி தோன்றுதலும், கண்ணுறக்கம் கொள்ளுதலும், அக்கம் பக்கத்தார் நினைந்து சொல்லும் பொல்லாங்குகளும், வாய்ப்பான காலமின்மையும், உலகத்தார் கூறும் அவநம்பிக் கைச் சொற்களும் மதியின் குறைவினல் ஏற்படுவன. இங்கு மதியின் குறைவு என்பது, காரியம் செய்வோரின் மதிக்குறை வும், அயலாரின் மதிக்குறைவும் என இரு வகைப்படும். இவற்றைத் தாழாத முயற்சியினல் வெல்ல வேண்டும் என்கிறர் ஆசிரியர்.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணா யினர்.

என்பது அப்பாடல். செயலையே குறிக்கோளாகக்கொண்டிருப்போர் இங்ஙனம் இருப்பர் என்பது கருத்தாகிறது.

விதியானது, மிகப் பெரும் வலிமையுடையது என்பது அறநூல் ஆசிரியர்களின் கருத்து. திருவள்ளுவர், "ஊழிற் பெருவலி யாவுள? என்று கேட்கிறார். விதி வசத்தால் எல்லாம் முடிந்துவிடும் என்பது குமரகுருபரருக்கும் உடன்பாடு. ஆனால், இடையறாப் பேரன்புடன் இறைவனை வழிபடும்அன்பர்களுக்கு அவ்விதியினால் வரும்துன்பங்கள் அவ்இறையருளால்மென்மையாக்கப்படும்; அல்லது நன்மைகளாய் முடியும் என்பது உண்மை. இக்கருத்தினை விளக்கவந்த அடிகள், மார்க்கண்டேயரின் வரலாற்றைச் சான்று காட்டுகிறார். பதினாறு ஆண்டில் இறந்து விட வேண்டும் என்பது மார்க்கண்டேயரின் விதி. ஆனால் அவ்விதி நிறைவேறும் தறுவாயில் அவரின் பக்தியினால் அது நலமாக முடிகிறது. எனவே இடையறா முயற்சியும், இறையருளும் துணையாக இருக்குமானால் விதியின்வலிமையைத் தாங்கி உய்யலாம் என்பது ஆசிரியரின் தெளிவானகருத்தாகும்.

உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையு முண்டே — உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே போலுங் கரி.

என்பது அக்கருத்தமைந்தபாடல். ஈண்டு "பான்முளை" என்பது விதியையும், "கான்முளை" என்பது மார்க்கண்டேயரையும் குறிக்கின்றன.

முடிவுரை :

இங்ஙனம் நீதிநெறிவிளக்கம் என்னும் நூல், திருக்குறளின் வழி தோன்றியிருப்பினும், சில புதிய கருத்துக்களைச் சமூக அமைப்பிற்கேற்ப அழகுற விளக்கியுள்ளது. பொருளாதார நிலையில் நடுத்தரப்பினர் எப்படி மன அமைதிகொண்டு வாழ வேண்டும் என்பதும், தெய்வநம்பிக்கைஉடையார் தீமை செய்தால் தண்டனை விரைவாகவும், கடுமையாகவும்கிடைக்கும் என்பதும் நன்முயற்சினாலும் நல் நம்பிக்கையினாலும் விதியையும் வெல்லலாம் என்பதும் அறிய வேண்டிய உண்மைகளாகும். இத்தகைய கருத்துக்களை வழங்கியுள்ள குமரகுருபரர் திருவடிகளைப் போற்றி அவரருளியுள்ள சிந்தனைகளை ஏற்றுச் செம்மையுற வாழ முயல்வோமாக.

புரட்டாசி மாதச் சிறப்பு நாட்கள்

17...9...90 திங்கள், திருவையாறு மாதப் பிறப்பு தீர்த்தம். ஷடசீதி-கன்–ரவி 14-26 மாத சிவராத்திரி.

18...9...90 செவ்வாய், சர்வ மகாளய அமாவாசை. வேளூர் கேதார கௌரீ விரத பூர்த்தி.

19...9...90 புதன், தருமை ஸ்ரீ மஹாலக்ஷ்மி துர்க்கா தேவிக்கு நவராத்திரி உற்சவ சதசண்டிஹோம பூர்வாங்கங்கள்.

20...9...90 வியாழன், நவராத்திரி பூஜாரம்பம். வேளூர், திருக்கடவூர், சீகாழி, திருவையாறு முதலிய தலங்களில் பிரதிதினம் ஸ்ரீ அம்பாளுக்கு லட்சார்ச்சனை நடைபெறும். தருமை ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி சந்நிதியில் சதசண்டியக்ஞ

22...9...90 சனி, வைசிரா சதுர்த்தி விரதம். [ஆரம்பம்.

25...9...90 செவ்வாய், சஷ்டி விரதம், தருமை ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகை சதசண்டி யக்ஞசாலையில் மாலை வில்வ விருக்ஷாபி மந்திரணம்.

27...9...90 வியாழன், காலை ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகைக்குச் சதசண்டியக்ஞம். காலையில் அஷ்டாதச ஆயுதமண்டல பூசை, வேளூர் மகிடாசுரசங்காரம்.

28...9...90 வெள்ளி, சரஸ்வதிபூசை, ஆயுதபூசை, சிரவண விரதம், தருமை ஆதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மிதுர்க்காம்பிகை சன்னதியில் சதசண்டி யக்ஞாரம்பம். மஹாபூரணாகுதி, சோபன திரவ்ய சமர்ப்பணம். இரவு மண்டல பூசை, சீகாழி, திருக்கடவூர், திருவையாறு முதலியதலங்களில் ஸ்ரீஅம்பாளுக்கு லக்ஷார்ச்சனை பூர்த்தி. ஏனாதிநாத நாயனார் குருபூசை.

29...9...90 சனி, விஜயதசமி, தருமை ஸ்ரீ மஹாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்குச் சதசண்டியக்ஞ கலசாபிஷேகம். விசேஷ பூசை. வேளூர்ஸ்ரீதையல்நாயகி அம்பாளுக்குலக்ஷார்ச்சனை பூர்த்தி. சிரவண விரதம்.

2...10...90 செவ்வாய், கரிநாள். பிரதோஷம். நரசிங்கமுனையரையர்

3...10...90 புதன், ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். [குருபூசை.

4...10...90 வியாழன், பௌர்ணமிவிரதபூஜையில் அபூபம்சாத்துதல். வேளூர் மூன்றுதின சூரியபூசை. உமாமகேசுவர விரதம். தருமை, வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு, திருவாரூர் முதலிய தலங்களில் நிறைபணிவிழா.

5...10...90 வெள்ளி, உருத்திரபசுபதி நாயனார் குருபூசை.

7...10...90 ஞாயிறு, சங்கடஹர சதுர்த்தி. கிருத்திகை விரதம். தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம்.

8...10...90 திங்கள், வேளூர் கிருத்திகை. திருநாளைப்போவார்

13...10...90 சனி, ஆயில்ய விழா. [குருபூசை.

15...10...90 திங்கள், அருணந்தி சிவாசாரியர் குருபூசை.

16...10...90 செவ்வாய், பிரதோஷம். மாத சிவராத்திரி. பின்னிரவு விடியல் நரகசதுர்த்தசி ஸ்னானம்.

17...10...90 புதன், தீபாவளிப்பண்டிகை. மாதப்ரவேசபுண்யகாலம் துலாரவி 41-48. துலாவிஷு புண்யகாலம்.

GNANASAMBANDAM Regd. No. TN / M. M. I
வெளிநாடு Regd. No. TN / M M 4

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பகம் வெளியீடுகள்

விலைப் பட்டியல்

1.	ஸ்ரீ சொக்கநாதசுவாமி திருவருட்பா ரூ.	1—00
2.	ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா	1—20
3.	திருத்தொண்டர் திருவந்தாதி	3—00
4.	இடர்களையும் திருப்பதிகங்கள்	1—25
5.	சைவசித்தாந்தம் டீலக்ஸ் (ஆங்கிலம்)	16—50
6.	சைவசித்தாந்தம் ஆர்டினரி (ஆங்கிலம்)	15—00
7.	சிவஞானபோதத் தெளிபொருள்	0—50
8.	அனைத்துலக சைவசித்தாந்த முதல் கருத்தரங்கம் விழாமலர்	12—00
9.	சித்தாந்த சைவ வினாவிடை	8—00
10.	சதமணிக்கோவை	3—00
11.	சிவப்பிரகாசக்கட்டளை	0—70
12.	சிவஞானபோதம் (பொழிப்புரையுடன்)	0—25
13.	சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்	15—00
14.	There can be only one Final conclusion in Saiva Siddhanta	8—00
15.	Symposes of Seminar Papers	8—00
16.	சிவஞானபோதம்	1—00
17.	சைவசமயம்	4—00
18.	உண்மை விளக்கம்	1—00
19.	உண்மை நெறி விளக்கம்	0—30

(அஞ்சல் செலவு தனி)

கிடைக்குமிடம் :— செயலாளர்,

ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்,
தருமபுரம் - மயிலாடுதுறை 609001.

Printed & Published by V. Ramaiah Pillai, Manager, Dharmapuram,
at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-9-90